மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 6 சுற்றம் : 5 / மே 2018 / ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி / விலை : ரூ.10/-




# காவிரிக்காக போராடியே ஆக வேண்டும்



நமது காவிரி! நமது விவசாயி!!
நாம் அன்னையர் முன்னணி



## நாடகம்?



தமிழறிஞர் திரு. பச்சையப்பனார் அவர்களுடன் முற்றம் ஆசிரியர் திரு. விசவனூர். வே. தளபதி, புலவர் ஏழுமலை, திரு. சோழநாச்சியார் ஆகியோர்.




'நாம் அன்னையர் முன்னணி' ஏற்பாட்டில் சென்னை எலியட்ஸ்கடற்கரையில் நடத்தப்பட்ட காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரியஆர்ப்பட்டத்தில், முற்றம் ஆசிரியர், திரு. ஜார்ஜ் செல்லதுரை, திரு. ரிச்சர்ட், நடிகர் திரு. சவால்ராம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly April 2018

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம்.ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம்.ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
**சு.மணிமாறன்**
**அலெக்சாண்டர்**

வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை– 600 024
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

காவிரிக்காக போராடிய ஆகவேண்டும்
– தலையங்கம் ....4

முதல்வேங்கையின் வீரச்சாவு (லெப்.சங்கர்) ....6

பத்திரிக்கையாளர்கள் மீதான வழக்குகளை
திரும்பப் பெறவேண்டும்.... 8

லிங்காயத்து – இந்துக்கள் அல்ல
தனிமதம் – தமிழ் சமயச் சூழல் ....9

மாநகர விரிவாக்கம் ....12

மக்களை அச்சுறுத்தும் புற்றுநோய் ....13

திரு. ம.பொ.சி அவர்களது எனது போராட்டம்
என்ற நூலில் இருந்து.... 14

நாடகம்
– திரு.குமரேசன்.... 18

கர்நாடகத்தின் சட்ட விரோதச் செயல்களை ஊக்கப்படுத்துகிறது
உச்ச நீதிமன்றம்
– பெ.மணியரசன் அறிக்கை.... 19

வெண்ணீரின் பயன்கள்.... 21

தன்னிகரில்லாத் தமிழ்
– எழுத்தாளர் கோபிபிரபா ....22

கவிதைகள்.... 24

துப்புரவுத் தொழிலாளர் நிலை
– சைதை மணிமாறன் ....25

பா.ச.க. அதிகாரத்திற்கு வந்தது எப்படி?....26

ஈழத்தின் மூத்த கவிஞர் நாவண்ணன் 27

இந்தியாவில் உல்ல நிலைமையைக் கண்டு வெட்கப்படுகிறோம் ....30
இராணுவத் தளவாட உற்பத்திக் கேந்திரங்கள்

– பூவுலகின் நண்பர்கள் ....32

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# காவிரிக்காக போராடியே ஆக வேண்டும்

தமிழர்கள் எங்குமே இருக்கக்கூடாது என்பதுதான் இந்திய ஒன்றியத்தின் ஆசையாக அல்லது கொள்கையாக இருக்குமோ என்கிற ஐயம் நமக்கெல்லாம் ஏற்படுகிறது. தமிழீழத்தில் இலங்கை நடத்திய இனப்படுகொலைகளை எந்த ஒரு மனிதனும் மறந்திட முடியாது. அந்த தமிழினப் படுகொலைக்கு இந்திய ஒன்றியம் துணை போன துரோகச் செயலை தமிழனாகப் பிறந்த எந்த ஒரு மனிதனும் மன்னிக்க மாட்டான். எங்கெங்கோ நடக்கிற கொலைகள், சித்திரவதைகளை எல்லாவற்றையும் எடுத்துப் பெரிதாக ஊதும் ஆங்கில ஊடகங்கள், இந்திய ஊடகங்கள் ஏனோ தெரியவில்லை ஒன்றரை இலட்சம் தமிழர்களின் அழிவைப் பற்றிப் பேசவில்லை. காரணம் என்ன?

2009ஆம் ஆண்டு நடந்த இனப்படுகொலைக்கு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. பன்னாட்டு மன்றத்தில் அதிகாரக் கோலோச்சும் நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக நீதிக்கு எதிராகத்தான் இதுவரை நடந்து வருகின்றன. உலக அரங்கில் அதிகாரம் பெற்றிருக்கிற சீனா தனது நலனுக்காக, இலங்கையில் தனது ஆதிக்கத்தைச் செலுத்துவதற்காக தமிழின அழிப்பில் இலங்கைக்கு துணை போனது. எல்லோரும் சேர்ந்து உலகின் மூத்த குடியை






உலகிலிருந்து அழித்துவிட வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

தாய்த் தமிழகத்தில் தமிழ்க்குடிகளுக்கு எதிரான, வாழ்க்கையை அழிக்கும் நாசகாரத் திட்டங்களை இந்திய ஒன்றியம் செயல்படுத்தி வருவது மோசமான செயலாகும். சீர்காழியில் அதானியின் நிறுவனம் துறைமுகம் அமைக்கப் போவதாகத் தகவல்கள் வருகின்றன. சீர்காழியில் எதற்கு துறைமுகம்? தமிழர் பூமிக்கடியில் இருக்கும் வளங்களைச் சுரண்டி கொள்ளை அடிக்கவா? நெல் உற்பத்தியில் உலகமே வியந்த தஞ்சைப் பகுதிகளை வறண்ட பாலைவனமாக மாற்றுவதற்கு அதிகார வர்க்கம் அழிவு வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறது. மீத்தேன் எடுக்கிறோம், ஹைட்ரோ கார்பன் எடுக்கிறோம், எரிவாயு எடுக்கிறோம், அணுவைப் பிளக்கிறோம் என்று சொல்லி தமிழ் நிலத்தை பாழ்படுத்தி தமிழர்களை அழித்தொழிக்க முனைகிறது அதிகார வர்க்கம்.

இதுவரை எத்தனையோ இடர்களைப் பார்த்து, அவைகளைக் கடந்து நின்று கொண்டிருக்கிற நம் தமிழினம் இப்படிப்பட்ட அழிவு நிலைகளையும் தகர்த்தெறிந்து தலைநிமிர்ந்து வாழ்ந்திட ஒவ்வொரு தமிழரும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். கோழையாக வாழ்ந்து குலத்தை அழிவிற்குள் கொண்டுபோய் விடக்கூடாது. வீரத்தோடு பிறந்த தமிழ்க்குடி என்றுமே அக்குணம் மாறாது, மாற்றானுக்கு மண்டியிடாது, எதிரிகளை விரட்டி அடிக்க வேண்டும். தண்ணீரினாலே உலகப்போர் வரும் என்ற தொலைநோக்கு எச்சரிக்கையை என்றும் நம் மனதில் நிறுத்தி காவிரிக்காக போராடியே ஆக வேண்டும். வளத்தைச் சுரண்டும் வந்தேறிகளை வந்த வழியே விரட்டி அடிக்க வேண்டும். வாழ்ந்து விட்டுப் போகட்டும் என்று விட்டால், வாழ்ந்த வீட்டையே பற்றி எரிய வைக்கும் பாதகத்தைச் செய்யத் துணியும் வஞ்சகர்களை இன்னும் நாம் பொறுத்துக் கொள்வது நல்லதல்ல.

ஆறு என்பது ஓடக்கூடியது. ஆனால், அந்த ஆற்றை அணைகட்டி மறித்துக் கொண்டு இயற்கைக்கு எதிரான செயல்களைச் செய்து கொண்டிருக்கிறது கர்நாடக அரசு. காவிரியில் வெள்ளம் ஏற்படும் காலங்களில் மட்டும் அணைகளைத் திறந்து விட்டு, காவிரித்தாயின் சீற்றத்தில் இருந்து தப்பித்துக் கொள்வது அவர்களுடைய வழக்கமாக இருக்கிறது. தமிழர்கள் நிம்மதியாக இருந்து விடக்கூடாது என்று எப்போதுமே நினைக்கும் ஆளும் அதிகார வர்க்கம், காவிரி அதன் நோக்கத்திற்கு ஓடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாகவே இருக்கிறது. காரணம் வாக்கு அரசியலாக இருந்தாலும் கூட, தமிழகத்தில் இருக்கிற வளங்களை எல்லாம் சுரண்டி எடுத்து அவர்களை வளமாக்கிக் கொண்டு, தமிழகத்தை பாலை நிலமாக்கிவிட வேண்டும் என்பதுதான் முழுமுதற் நோக்காக உள்ளது. ஆக, இந்திய ஒன்றியம் நடத்தி வரும் தமிழருக்கு எதிரான செயல்பாடுகளை ஒருபோதும் உண்மையான தமிழ் குடிமக்கள் அனுமதிக்கக்கூடாது. அதற்காக என்ன விலை கொடுக்கவும் தயாராக வேண்டும். ●

# முதல் வேங்கையின் வீரச்சாவு

லெப். சங்கர் – சுரேஷ் (செல்வச்சந்திரன் சத்தியநாதன்) கம்பர்மலை, வல்வெட்டித்துறை.
பிறப்பு : 19. 06. 1961 வீரச்சாவு : 27. 11. 1982

ஆயுதப்படைகள் வலை விரித்துத் தேடிய செ. சத்தியநாதன்.இருபது வயதிலேயே தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட கொரில்லா வீரர், தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவர்.

கண் திறக்காத பூனைக்குட்டியாக நெஞ்சில் கனலும் புரட்சிகர உணர்வோடு சின்ன வயதிலேயே இயக்கத்திற்கு தன்னை அர்ப்பணிக்கக் காத்திருந்த வீரமறவர். அரச படையின் திடீர் முற்றுகையிலிருந்து தப்பிச் செல்லுகையில் சுற்றி நின்று கொமாண் டோக்கள் சரமாரியாக வெடிகளைத் தீர்த்தபோது காய முற்று, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முதலாவது களப்பலியாகும் பெருமையை அணைத்துக் கொண் டார்.

சங்கர் அச்சம் என்றால் என்னவென்று அறியாத அடலேறு. ஒரு சின்னப்பிசகு என்றாலும் கையோடு வெடித்து ஆளையே முடித்துவிடக்கூடிய வெடி குண்டுகளின் தயாரிப்பிலும் அச்சமில்லாது ஈடுபடு வார். அரச படைகளின் தீவிரக் கண் காணிப்புக்கு மத்தியில் அவர் கிராமங்களின் வீதிகளில் சாதாரண மாக உலாவி வருவார். அதே நேரத்தில் சுழன்று கொண்டிருக்கும் விழிகள் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை நுணுக்கமாக அவதானித்தபடியே இருக்கும். தான் அறியாது செய்யும் சின்னத் தவறும்கூட ஒரு கெரில்லா வீரன் என்ற முறையில் தனக்கும் இயக்கத்திற்கும் ஆபத்து ஏற்படுத்தும் என்பதில், சங்கர் எப்போதும் விழிப்பாயிருப்பார். அரச படைகளின் கையில் சிக்க நேருமானால் எதிரிகளில் ஒருவனையாவது வீழ்த்திவிட்டுத் தானும் சாவது என்பதில், அவர் அசைந்தது கிடையாது. விடுதலைப் போராளிகள் எனப்படுபவர்கள் ஆயுதங்களோடு பிடிபடும் செய்தி களைப் பத்திரிகையில் வாசிக்கையில் குமுறுவார். அமைதியான தன்மையும் அதிகம் பேசாத சுபாவமும் கொண்ட சங்கரின் இந்தக் குமுறலுக்கு, ஆழ்ந்த அர்த்தமுண்டு. ஆயுதங்களையும் வைத்துக் கொண்டு, அரச படைகளின் கையில் எதிர்ப்பு எதுவுமில்லாமல் ஒரு விடுதலைப் போராளி சரணடைவது கோழைத் தனமானது என்பது, சங்கரின் உறுதியான முடிவாக இருந்தது. குறிப்பாக, தமிழீழ விடுதலைப் போராட் டத்தின் ஆரம்ப கட்டங்களில், விடுதலைப் போராளி களை ஆயுதங்களோடு அரச படைகள் கைது செய்வதை அனுமதிக்கும் போக்கானது, அரச படைகளுக்கு விடுதலைப் போராட்டத்தை முறியடித்து விடுவதில் நம்பிக்கையை ஊட்டி, அவர்களின் துணிச்சலைக் கூட்டிவிடும் என்று சங்கர் கருதினார்.



படுகாயமுற்ற நிலையிலும்கூட மதில் தாண்டிப் பாய்ந்து, தங்கள் கெரில்லாப் பிரிவின் மற்றொரு மறைவிடத்தை நோக்கித் தப்பிச் சென்றவர். பாதுகாப்பான இடம் வந்து சேர்ந்துவிட்டோம் என்று தெரிந்தபின்தான் இடுப்பிலிருந்த ரிவோல்வரை எடுத்து கீழே வைக்கிறார். உயிரோடும் ஆயுதத்தோடும் எதிரியின் கைகளில் பிடிபடாத ஒரு வீரரின் சாவு அவருடையது.

இருபத்தொரு வயதில் அவர் சாதித்தவை தமிழீழப் போராட்ட வரலாற்றுக்குச் சொந்தமானவை. இனிமேல் சாரணர்களை அனுப்பி வடக்கில் புலிப் படையை அடக்கி விட முடியும் என்று, பாசிச சர்வாதிகாரி ஜே. ஆர். ஜயவர்த்தனா சிறீலங்காத் தலைநகரில் பிரகடனம் செய்தபோது, நெல்லியடியில் அரச படைகள்மீது சங்கர் நடத்திய கெரில்லாத் தாக்குதல் தமிழீழம் காணும் வரை தமிழீழப் போராட்டம் ஓயாது, ஒழியாது என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டியது. ஜீப் சாரதியின்மீது வெற்றிகரமான முதல் தாக்குதலை நடத்தி, ஜீப் வண்டியை நிறுத்த வைத்து, கதவைத் திறந்து சாரதியை ஒரு கையால் வெளியே எடுத்து எறிந்தவாறு, மறு எதிரியை நோக்கிக் குண்டுகளைத் தீர்க்கும் லாவகம் சங்கருக்கே உரியது. இடுப்பிலிருந்த ரிவோல்வரை எடுத்த மாத்திரத்தில் குறிவைக்கும் அவரது சாதுரியம் அசலானது. நெல்லியடியில், அரச படையினர் பீதியுற்ற நிலையில் சங்கர் கால்களை அகல விரித்து, பக்கவாட்டில் நின்று, அரச படையினர் மீது குண்டுமாரி பொழிந்த காட்சி, இப்போதும் நம் கண்களில் நிழலாடுகிறது.

சாவகச்சேரி போலிஸ் நிலையத்தின்மீது சீலனின் தலைமையில் நடைபெற்ற கெரில்லாத் தாக்குதலின் வெற்றிக்கு, சங்கரின் பங்கும் கணிசமானதாகும். அரசாங்கத்தால் பொலிஸ் நிலையங்கள் உஷார்ப் படுத்தப்பட்டிருந்த நிலையில், மாடிக் கட்டிடத்தோடு பிரதான வீதியிலிருந்து சற்றுத்தள்ளி உள்ளே அமைந்திருந்த சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீது, முன்பக்க வாலுக்கூடாகத் தாக்குதல் நடத்துவது என்பது விஷப்பரீட்சைதான். ஆனால் உயிரைக் கடந்த காலத்திற்கு எழுதி வைத்துவிட்டு, புரட்சி வேள்வியில் குதித்திருக்கும் சங்கர், சீலன் ஆகிய போராளிகளின் முன்னே அபாயங்களும் தடைகளும் என்ன செய்துவிட முடியும்? ஜீ3 துப்பாக்கி சகிதம் சங்கர் படுத்துக்கிடந்து, சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்து நடாத்திய தாக்குதல், அப்பகுதி அரச படைகளை ஸ்தம்பிக்கச் செய்தது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் முதலாவது சாவை அணைத்துக் கொண்ட பெருமையுடன் துயில்கிறார்

பொன்னாலைக் குண்டு வெடிப்பு நடவடிக்கை யிலும் சங்கர் கடுமையாக உழைத்தவர். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தம்பாப்பிள்ளை மீதான இயக்க நடவடிக்கைக்குச் சங்கரே பொறுப்பு வகிக்கிறார்.

எந்தவிதமான வாகனத்தையும் நேர்த்தியாகச் செலுத்தும் ஆற்றலும் சங்கரின் பல்முனைப்பட்ட ஆற்றலுக்குச் சான்றாகும். ஒரு கெரில்லா தாக்குதலையடுத்து ஏற்படுகிற பரபரப்பு, எதிரிப் படைகள் ஸ்தலத்திற்கு வருமுன்னர் வெளியேற வேண்டிய பதைப்பு என்பவற்றிற்கும் மத்தியில், மிகுந்த வேகத்துடனும் அதிக நிதானத்துடனும் வாகனத்தைச் செலுத்துவதில் சங்கர் வல்லவர்.

சக போராளிகளுக்கு ஆயுதங்களைப் பயிற்றுவிக்கும் போது மிகுந்த கவனம் செலுத்துவார். தெளிவாக விளக்குவார். தனக்குத் தெரியாத விசயங்களை மற்றவர் களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டவர். அன்போடும் பணிவோடும் பழகுவதால் சக போராளிகளின் மத்தியில் தனி மதிப்பு வகித்து வந்தார்.

தமிழீழ விடுதலையைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவத் தலைமையிலேயே வென்றெடுக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த சங்கர், இயக்கத்தில் தன்னையே கரைத்துக் கொண்டவர். விடுதலைப் போராட்டமே சங்கரின் முழுமூச்சாக இருந்தது. விடுதலைப் போராட்டத்திற்கென்றே ஆயுதமேந்திக் களத்திலே குதித்தவர் இந்த வீரர். சமூக விரோத நடவடிக்கை களையும் சந்தர்ப்பவாதிகளையும் அவர் அறவே வெறுத்தார். அவர் மனசு மிகவும் சுத்தமானது. இத்தகைய இதயசுத்தி நிறைந்த போராளிகளே ஒரு விடுதலை இயக்கத்தின் தூய்மைமக்குச் சாட்சியாக நிற்கிறார்கள்.

தலைவர் பிரபாகரனின் அரசியல் வழி காட்ட லிலும், இராணுவக் கட்டுக்கோப்பிலும் சங்கர் ஊறி வளர்ந்தவர். தலைவர் பிரபாகரனின் அரசியல் தூய்மையில் அவர் எல்லையற்ற மதிப்பு வைத்திருந் தார். மலரப்போகும் தமிழீழம் தன்னலமற்ற தூய்மைமிக்க விடுதலைப் போராளிகளால்தான் தலைமையேற்று நடத்தப்பட வேண்டும் என்று, அவர் எப்போதுமே சொல்லி வந்திருக்கிறார். பதவிப் பித்தர்களும் துரோகிகளும் எங்கள் புனித இயக்கத்தின்மீது களங்கம் கற்பிக்க முனைந்த போதெல்லாம், அமைதியான இந்தப் போர் மறவர் சினங்கொண்டு எழுந்திருக்கிறார்.

சாகும் தருவாயிற்கூட அவன் தன் உற்றார், பெற்றாரை நினைக்கவில்லை. “தம்பி... தம்பி“ என்றுதான் அந்த வீரரின் உதடுகள் வார்த்தைகளை உதிர்த்தன. தம்பியும், மற்ற இயக்கப் போராளிகளும் கண்கலங்கி நிற்க அந்த வீரமகன் சாவிலே வீழ்ந்து போனான்.

‘ஒரு உண்மை மனிதனின் கதை’ என்ற ரஷ்ய நாவலைக் கடைசியாக வாசித்துக் கொண்டிருந்த சங்கர், அந்த நாவலை முழுதும் வாசித்து முடிக்க வில்லை. சங்கர் என்ற உண்மை மனிதனின் கதை, ஒரு வீர காவியம்தான்! ●




தமிழன் அன்சாரி MLA, தனியரசு MLA, கருணாஸ் MLA வேண்டுகோள்.

(மனிதநேய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் மு. தமிழன் அன்சாரி விலிகி, தமிழக கொங்கு இளைஞர் பேரவை தலைவர் தனியரசு விலிகி, முக்குலத்தோர் புலிப்படை தலைவர் கருணாஸ் விலிகி, ஆகியோர் வெளியிட்ட கூட்டறிக்கை)

பா.ஜ.க.பிரமுகர்களான ராஜா அவர்களும், எஸ்.வி.சேகர் அவர்களும் சமீபத்தில் பெண்கள் குறித்து வெளியிட்ட கருத்துகள் நேர்மையான அரசியலுக்கும், நாகரீக பொதுவாழ்வுக்கும் எதிரானதாகும்.

பெண்களின் கண்ணியத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் சமூகமே, நாகரீக சமூகமாகும். பெண்களை தரக்குறைவாக விமர்சிக்கும் நபர்கள் இத்தகைய பட்டியலில் இடம் பெற முடியாது.

எஸ்.வி.சேகர் அவர்கள் வேறு ஒருவருடைய கருத்தை, கவனக்குறைவாக பகிர்ந்ததாக கூறியதை ஏற்காத, பத்திரிக்கையாளர்கள் அவர் வீடு முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். அதில் சிலர் கோபத்தில் கல்வீச்சில் ஈடுபட்டது ஏற்புடைய செயல் அல்ல.

அதே நேரம் ஹெச். ராஜா அவர்களையும், எஸ்.வி.சேகர் அவர்களையும் கைது செய்ய தயங்கும் காவல்துறை எஸ்.வி.சேகர் வீட்டின் மீது கல்வீச்சு நடத்திய பத்திரிக்கையாளர்களை மீது 6 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, கைது செய்ய துடிப்பதன் பிண்ணனி என்ன? என்பதை அறிய விரும்புகிறோம்.

டெல்லியிருந்து, தமிழகத்தில் செயல்படும் ஊடகங்களுக்கும், அதன் ஆசிரியர்களுக்கும் திட்டமிட்டு கொடுக்கப்படும் நெருக்கடிகளை தமிழகம் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறது.

தமிழக அரசு, இவ்விஷயத்தில் வெறுப்பு, விருப்பின்றி நியாயமாக செயல்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

# பத்திரிக்கையாளர்கள் மீதான வழக்குகளை திரும்ப பெற வேண்டும்...

கர்நாடகாவில் பெருமளவில் உள்ள லிங்காயத்து பிரிவு மக்கள், தாங்கள் ஹிந்துக்கள் கிடையாது, எங்கள‌ுடையது பசவண்ணாவால் 12ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட தனி சமயம்..எனவே எங்களை தனி மதமாக அறிவிக்க வேண்டும். என்ற கோரிக்கையை எழுப்பி வருகிறார்கள்.இது திடீர் கோரிக்கையல்ல..பல ஆண்டுகளாகவே இந்த கோரிக்கையை லிங்காயத்து சமூகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்..

காரணம், லிங்காயத்துகளின் கொள்ளைகளும், வழிபாட்டு முறைகளும், வைதீக ஹிந்து முறைகளுக்கு முற்றிலும் மாறுபட்டது. இந்து சனாதன வேதங்களையும் உபநிஷத்துகளையும், பிறப்பின் அடிப்படை வர்ணங்களையும் மனுதர்மத்தையும் ஏற்றுக்கொள்ளாத புறம்தள்ளுகிற பிரிவுதான் இந்த லிங்காயத்துகள் அனைவரும் சமம் என்னும் சன்மார்க்க முறையினர். யாகம், நெருப்பு போன்றவற்றை கைகொள்ளாதவர்கள். பிராமணர்களை வைத்து எந்த சடங்கு, பூஜைகளை செய்யாதவர்கள். பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வை திணிக்கும் மனுதர்மத்தையும் இந்துத்துவாவையும் ஏற்காத முற்போக்கான அறிவியல் பூர்வமான மதம்தான் லிங்காயத்துகளின் வீரசைவம். இவர்களுடைய திருமணம் மற்ற ஹிந்துக்கள் போல் அந்தணர் வைத்து நடத்தபடுவதில்லை. வேதங்கள் ஓதப்படுவதில்லை. நெருப்பு மூட்டப்படுவதில்லை. இவர்களுடைய மடங்களின் தலைவர்கள் தலைமையில் திருமணங்கள் நடத்தப்படுகிறது.

பார்க்கப் போனால், பசவண்ணா ஒரு பார்ப்பனர். அரசர்களின் ஆலோசகராக இருந்தவர். அக்காலத்திய வைதீக சனாதன முறைகளால் மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைக் கண்டு, மனம் வெதும்பி, தனி வழிபாட்டு முறையை ஏற்படுத்தி, எந்தச் சாதியினரும், இந்த வழிபாட்டு முறையை பின்பற்றலாம். என இந்த லிங்காயத்து வழிபாட்டு முறையை ஸ்தாபித்தார். உள்ளங்கையில் ஒரு சிறு கருப்பு நிற லிங்க வடிவம் மட்டுமே வைத்து வழிபடுவார்கள். மற்றபடி கோயில், சிலைகள், தெய்வங்கள் என்ற பொதுவான இந்து வழிபாட்டுமுறை கிடையாது.

# லிங்காயத்து - இந்துக்கள் அல்ல - தனி மதம் - தமிழ் சமயச் சூழல்



ஹிந்துக்கள் என்னும் தனி அடையாளமே ஆங்கிலேயர் ஆட்சியின் பின் பகுதிகளில் தான் கொடுக்கப்பட்டது. அதுவரை, இந்தியாவில் சைவர்கள், வைணவர்கள், ஆசிகம், சாகியம் என பல்வேறு பிரிவுகள், தனித் தனியான வழிபாட்டு முறைகளைக் கொண்டிருந்தன. தமிழகத்தில் அரசர்கள் எந்த பிரிவை பின்பற்றினார்களோ, அதுவே அந்நேரத்தில் மக்களின் மதமாக விளங்கியது. மூத்தோர் குலதெய்வம், வீட்டு சாமி வழிபாடு, வீரர்களின் நடுகல் வழிபாடு போன்றவைகளே முதலில் தமிழர்கள் மத்தியில் இருந்தது. பின்னர், சமணம், பவுத்தம் போன்ற சமயங்கள் எழுச்சி பெற்ற காலங்களில், சைவம், வைணவம் போன்றவை, ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்ற சமய அடியார்களால் மீள்விக்கப்பட்டது. அப்போதும், சைவம், வைணவம் என பிரிந்தே செயல்பட்டன. இப்போதும், பெருமாளை கும்பிடும் வைதீக வைணவப் பிரிவினர், சிவன் கோயில்களுக்குச் செல்லமாட்டார்கள். இதிலும், துவைதம், உருவ வழிபாட்டை மறுக்கும் அத்வைதம், விசிட்டாத்து வைதம், வடகலை, தென்கலை என ஏகப்பட்ட பிரிவுகள்...

பொதுவாக சைவப் பிரிவு தமிழக மக்களிடையே பரவலாக ஊடுருவிய ஒன்றாக விளங்கியது. பிராமணர்கள் அல்லாத பல்வேறு சைவ மடங்கள் இங்கு உண்டு. தமிழ்ச் சமூகம் எப்போதும் சனாதன மனுதர்ம வைதீக வேத மதத்தை எதிர்த்தே வந்துள்ளது. சைவ மடங்கள், சைவ சிந்தாந்த திருச்சபைகள், சித்தர்களின் மரபுகள், பட்டினத்தார் போன்ற துறவிகள், அருட்பெரும் சோதி வள்ளலாரின் சன்மார்க்க சபை, முத்துக்குட்டி என்ற அய்யா வைகுண்டர் என பல்வேறு காலகட்டங்களில் வைதீக வேத மதத்தை, அதன் மக்களை பிரிக்கும், இழிவு படுத்தும் கொள்கைகளை எதிர்த்து, சமதர்மம் பேசினார்கள். ஈழத்திலும் தமிழர்கள் சைவ மதத்தினர் என்றுதான் அடையாளப்படுத்திக்கொண்டனர்.

ஆனால், பிற்காலத்தில் எதிர்ப்பவர்களையும் உள்வாங்கி, "ஹிந்து" என பொது அடையாளம் சனாதன மதவாதிகளால் உருவாக்கப்பட்டது. இந்திய அரசியல் சட்டத்திலும், யார் இந்துக்கள் என்னும் பிரிவில், யாரல்லாம் முகமதியர் இல்லையோ, கிறிஸ்துவர் இல்லையோ பார்சி இல்லையோ, யூதமதம் இல்லையோ, அவர்கள் எல்லாம் சட்டத்தின்படி இந்துக்கள். அதிலும் பவுத்த, சீக்கிய, சமணர் (ஜெயின்)கள், சட்டத்தின்படி இந்துக்கள், ஆனால் மதத்தின்படி இந்துக்கள் அல்ல. (The Buddhists, Jains and Sikhs are explicitly included in the Hindus by law but separated from the Hindus by religion)

இப்படி பிராமணர்களின் மேலாதிகத்துக்காக, எண்ணிக்கையை உயர்த்திக்காட்ட, ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் கலந்து கட்டப்பட்ட கதம்பம் தான் இப்போதைய ஹிந்து மதம்...

## 'நாங்கள் இந்துக்கள் அல்ல"

"நாம் எல்லோரும் இந்துக்கள்'' என்ற முழக்கத்தை முன்வைத்து பாரதிய ஜனதா கட்சி இந்தியாவின் பெரும் பான்மை மாநிலங்களின் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்துள்ள நிலையில், ''நாங்கள் இந்துக்கள் அல்ல" என்ற முழக்கத் தோடு பா.ஜ.க.வுக்கு கடும் சவாலாக எழுந்து நிற்கிறார்கள் கர்நாடகாவின் லிங்காயத்துகள்.

தங்களை தனி மதமாக அங்கீகரிக்கக்கோரி லிங்காயத் துகள் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக போராட்டங் களை நடத்தி வரும் நிலையில்தான், இப்போது கர்நாடகாவை ஆளும் சித்தராமையா தலைமையிலான காங்கிரஸ் அரசு லிங்காயத்துகளை தனி மதமாக அங்கீகரித்து அறிவித்துள் ளது. இதற்கு சட்ட அங்கீகாரம் கொடுக்க வேண்டிய இடத்தில் மத்திய பா.ஜ.க. அரசு இருக்கிறது. 'லிங்காயத்துகள் தனி மதம்' என்ற அறிவிப்பை மத்திய அரசு ஏற்கப் போகிறதா, நிராகரிக் கப்போகிறதா என்பது இப்போதே கர்நாடகாவின் பரபரப்பான பேசுபொருளாகிவிட்டது. மிக விரைவில் கர்நாடக மாநில தேர்தல் நடைபெற உள்ள நிலையில், சித்தராமையாவின் இந்த மதிநுட்பமான அறிவிப்பு தேர்ந்த அரசியல் காய் நகர்த்தலாக பார்க்கப்படுகிறது.

கர்நாடகாவை பொருத்தவரை லிங்காயத்துகள் மற்றும் ஒக்கலிக்கர் பிரிவினரே பெரும்பான்மையினராக வாழ்கின் றனர். இவர்களை மையப்படுத்திதான் அம்மாநிலத்தின் தேர்தல் அரசியல் சுழல்கிறது. இந்த இரு ஜாதியினரின் ஓட்டுகளை அறுவடை செய்வோரே அதிகாரத்தில் அமர முடியும். இதுதான் 1952-ம் ஆண்டில் இருந்து நீடித்துவரும் யதார்த்தம். இந்த பின்னணியில்தான் லிங்காயத்துகளின் தனி மத கோரிக்கை அரசியல் அரங்கில் புதிய பரபரப்பை பற்ற வைத்துள்ளது.

கர்நாடக மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 17 சதவிகிதமாக இருக்கும் லிங்காயத்துகள் மாநிலம் எங்கும் பரவி வாழ்கின்றனர். இவர்கள், 12-ம் நூற்றாண்டில் வாழ்ந்த சமூக சீர்திருத்தவாதியான பசவண்ணரின் சித்தாத்தங்களைப் பின்பற்றுபவர்கள். பசவண்ணரை பொருத்தவரை இந்து மதத்தின் சாதி ஏற்றத்தாழ்வுகளை மிக் கடுமையாக எதிர்த்தவர். வர்ணாசிரம அடிப்படையிலான சாதி அடுக்குமுறையை மறுத்து பாவம், புண்ணியம், சொர்க்கம், நரகம் போன்ற இந்து மத கருத்துகளையும் நிராகரித்தார். சிவ வழிபாட்டை பசவண்ணர் வலியுறுத்தினாலும், அது இந்து மதத்தின் சிவ வழிபாட்டில் இருந்து கணிசமாக வேறுபட்டிருந்தது. தற்போது நடைமுறையில் உள்ள லிங்க வழிபாட்டை ஏற்காத பசவண்ணர், மனசாட்சியை குறிக்கும் விதமான இஷ்ட லிங்க வழிபாட்டை முன்மொழிந்தார். அவரைப் பின்பற்றி வந்த லிங்காயத்துகள் இஷ்ட லிங்க வழிபாட்டையே மேற்கொண்ட னர்.

காஞ்சிபுரம், திருவள்ளூர், மற்றும் வேலூரின் சில பகுதிகளை இணைத்து சென்னை மாநகரின் எல்லையை மேலும் விரிவுபடுத்தவிருப்பதாக தமிழக அரசு முடிவெடுத்திருப்பது பெரும் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. அந்தத் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும். பூவுலகின் நண்பர்கள் கோரிக்கை.

தனது இயற்கை வளங்களைப் பெருமளவில் நகர விரிவாக்கத்திற்காய்ப் பறிகொடுத்துவிட்டு கடும் குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியிருக்கும் ஒரு பெருநகரின் எல்லையை மேலும் விரிவுபடுத்தும் நடவடிக்கை ஒரு பேரழிவைத் துரிதப்படுத்தும் செயல்பாடு போலவே நாம் பார்க்கவேண்டியிருக்கிறது.

ஒரு காலத்தில் கோலோச்சிய பண்டைய நாகரீகங்கள் நகரமயமாக்கலின் உச்சநிலையிலேயே வீழ்ச்சியடைந்திருக்கின்றன. உலகின் மிகப்பழமையான நகரங்களில் ஒன்றாகக் கருதப்படும் இஸ்ரேலின் துறைமுக நகரான அக்கோ நகரம் (Akko) மிகமிஞ்சிய இயற்கை வளச்சுரண்டலாலும் அதனால் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தாலும் வறட்சியாலும் வீழ்ந்ததாக வரலாறு பதிவு செய்கிறது. அதே போன்று உலகின் மிகச்சிறந்த நாகரீகங்களுக்குள் ஒன்றாகக் கருதப்படும் மாயன் நாகரிகம் போன்ற நாகரீகங்களின் வீழ்ச்சியையும் நகரமயமாக்கலே தொடங்கி வைத்திருக்கிறது.

உலகெங்கும் உள்ள பெருநகரங்கள் கடும் குடிநீர் தட்டுப்பாடுகளிலும் மூச்சுத்திணற வைக்கும் சுற்றுச் சூழல் மற்றும் சுகாதாரச் சீர்கேட்டிலும் சிக்கித் தவிக் கின்றன. பெருநகரங்கள் மக்கள் வாழத்தகுதி யற்றவை யாகிக் கொண்டிருக்கின்றன. இச்சூழலில் கடந்தகால வரலாறுகளிலிருந்தும் நிகழ்கால செய்தி களிலிருந்தும் பாடம் கற்றுக்கொள்ள மறுக்கும் நம்மை ஆள்வோரின் போக்கு நமக்கு அச்சமூட்டுவதாக இருக்கிறது.

மிகையான வாகனப்பெருக்கம், அதனால் ஏற்பட்டி ருக்கும் காற்று மாசு, திறனற்ற திடக்கழிவு மேலாண்மை, குடிநீர்த் தட்டுப்பாடு பசுமைப்போர் வையின் சுருக்கம் என சென்னையின் தற்போதைய சிக்கல்களைத் தீர்க்கவே கையறு நிலையில் இருக்கும் அரசு, அதன் எல்லைகளை மேலும் விரிவுபடுத்தத் துடிப்பது புதிய புதிய சிக்கல்களுக்கே வழிவகுக்கும். நகரின் விரிவாக்கம் மேலும் மேலும் அதிக மக்களை தன்னோக்கியிழுக்கும் இது மேலும் அதிக சிக்கலான சீர்கேடுகளுக்கே வழிவகுக்கும்.

தன் குடிநீர்த் தேவைக் காக முற்றிலுமாக அண்டை மாவட்டங்களின் நீர்நிலைகளையும் புறநகர்ப்பகுதி களையும் சார்ந்திருக் கிறது சென்னை மாநகரம். நிலையற்ற காலநிலையையும், வறட்சியும், சுருங்கும் நீராதாரங்களும், புறநகர்ப்பகுதி களின் நிலத்தடி நீர்மட்ட வீழ்ச்சியும், மிகை நுகர்வும் சென்னையை ஒரு பெரும் குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் அபாயத்தை நோக்கி நகர்த்தி வருகின்றன.

# மாநகர விரிவாக்கம்?



மாநகர எல்லைகளை விரிவுபடுத்தும் முடிவு பெருநகரின் தாகத்தை மேலும் அதிகரிப்பதோடு நீராதாரங்களின் மறைவையும் துரிதப்படுத்தும். இவை மட்டுமின்றி சென்னையின் புறநகர்ப்பகுதிகளில் எஞ்சியிருக்கும் நீர்நிலைகளும் நக ரவிரிவாக்கங்களுக் காய் பலியாகும் அபாயம் ஏற்படும்.

மேலும் சாதாரண பருவமழையை எதிர்கொள்ளத் திறனற்ற வெள்ள அபாயத்திலிருக்கும் ஒரு மாநகரின் எல்லையை விரிவுபடுத்தி அதன் மக்கட்தொகையை அதிகரிப்பது நிச்சயம் அறிவார்ந்த முடிவாக இருக்க முடியாது. இச்செயல் மேலும் அதிக மக்களை அபாயத்துக்குள் சிக்கவைப்பதோடு பேரிடர் காலங் களில் மீட்புப்பணிகளிலும் தொய்வை ஏற்படுத்தும். கல்பாக்கம் உட்பட சென்னையும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளும் மிதமான நில நடுக்கத்திற்கான வாய்ப்புள்ள சோன்3க்கு கீழே வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதையும் நாம் இங்கு நினைவுகூர வேண்டியிருக் கிறது.

பொதுவாகவே நகரங்கள் அவற்றைச் சுற்றிலு முள்ள பகுதிகளைவிட வெப்பமானவை. நகரங்களின் வாகனப்புகையாலும் குறைவானப் பசுமைப் போர்வையாலும் அதிக வெப்பத்தை உறுஞ்சும் சாலைகள், கட்டிடங்கள் போன்றவற்றால் ஏற்படும் இந்நிலை "Urban Heat Island effect" (UHI) என அறியப்படுகிறது. இதன் விளைவு பகல் பொழுதுகளை விட இரவுகளிலேயே அதிகமாக இருக்கும். உலக வெப்பமயமாதல் ஒருபுறம் அச்சுறுத்திக் கொண்டிருக்க சமீபத்திய புயலுக்கு, தனது பலநூறு ஆண்டுகள் பழமையான பசுமைப்போர்வையும் பெருமளவில் பறிகொடுத்திருக்கும் நிலையில் நகர விரிவாக்கத்தால் அதிகரிக்கும் ஹிபிமி விளைவும் சேர்ந்து சென்னையில் நம் கோடை காலத்து இரவுகளை இன்னும் மோச மானதாக ஆக்கும்.

அவ்வப்போது செய்திகளில் அடிபட்டுக் கொண்டி ருக்கும் மர்மங்களின் உறைவிடமான கல்பாக்கம் அணுவுலை போன்ற ஆபத்தான அணுவுலைக்கு அருகிலிருக்கும் சென்னை மாநகரின் எல்லையை விரிவுபடுத்தும் போக்கு மேலும் அதிக மக்களை அதன் அபாய வளையத்துக்குள் கொண்டுவரும். சுனாமி ஏற்படுத்திய பாதிப்புகளை இன்னும் யாரும் மறந்து விட முடியாது. கூடுதலாக உலக வெப்பமயமா தலால் கடல் மட்டம் உயர்ந்துவரும் சூழலில் கடற்கரை யோரப் பெருநகரான சென்னையை விரிவுபடுத்துவது நிச்சயம் நீண்டகால நோக்கில் ஏற்புடைய செயலாக இருக்க முடியாது.

சென்னையில் தினமும் சேகரிக்கப்படுவதாகச் சொல்லப்படும் 5000 முதல் 7000 டன் குப்பைகளைக் கையாளவே நம் அரசு இயந்திரமும் அதன் காலவதியான இரண்டு மாபெரும் குப்பைக்கொட்டும் தளங்களும் திணறிக்கொண்டிருக்க நகர விரிவாக் கத்தால் பன்மடங்காகப்போகும் குப்பைகளுக்கு உருப்படியான எந்த தொலைநோக்குத் திட்டங்களோ மாற்றுகளோ இல்லாத நிலை நம்மை கலக்கம் கொள் ளச் செய்கிறது. இருக்கும் குப்பைகளை அகற்றவே தேவையான குறைந்தபட்ச தொழிற் நுட்பங்களோ கருவிகளோ ஊர்திகளோ போதுமான உட்கட்டு மானங்களோ இல்லாத நிலையில் அன்றைய பிரச் சினைக்கும் மட்டும் ஏனோதானோவென்று அவசர கதியில் முடிவெடுத்துவிட்டு மக்களை மீளாத்துயரில் ஆழ்த்த அரசு முயல்கிறதோ என்ற கேள்வி எழுகிறது.

அரசின் தவறான பொருளாதாரக் கொள்ளைக களாலும் விளைச்சல் பொய்த்தாலும் மக்கள் வேலை வாய்ப்புகளுக்காக நகரங்களை நோக்கி ஈர்க்கப்படுவது இன்று தவிர்க்க இயலாததாகியிருக்கிறது. இச்சூழலில் மாநிலத்தின் மொத்தத் தேவைகளான உணவு உற்பத்தி பதப்படுத்தல் முதல் வாகனங்கள் உற்பத்திவரையிலான அத்தனைத் தொழிற்சாலைகளையும் வணிக வளா கங்கள், மருத்துவமனைகள், தகவல் தொழிற்நுட்பப் பூங்காக்கள், கல்வி நிறுவனங்கள், அடுக்குமாடி குடி யிருப்புகள், போக்குவரத்து உட்கட்டமைப்புகள் என அனைத்தையும் மாநிலத் தலைநகரில் குவிப்பதைத் தவிர்த்து, அவை மாநிலம் முழுவதும் பரவலாக்கப்பட வேண்டும். கோவை திருச்சி, மதுரை திருநெல்வேலி, சேலம், தஞ்சாவூர் நாகப்பட்டினம் போன்ற நகரங்களில் தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும். அவற்றிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் தொலைநோக்குப் பார்வையுடன், அமைக்கப்பட வேண்டும்.

அதிகரிக்கும் மக்கட் தொகையைக் கருத்தில் கொண்டு குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நீர்நிலைகள் பாதுகாக்கப்பட வேண்டும். எஞ்சிய நீர்நிலைகள் மற்றும் பசுமைப் போர்வையைக் காக்கும் வகையில் குறைந்தபட்சம் பெருநகரங்களில் புதிய விரிவாக்கங்கள் நிறுத்தப்பட வேண்டும். கிராமங்களின் மக்கள் நகரங்களுக்கு இடம் பெயர்வதைத் தவிர்க்க கிராமங்களில் போதுமான தன்னிறைவுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

புதுப்புது சிக்கல்களை உருவாக்கும், நிலையான தீர்வுகளற்ற சுற்றுக்சூழல் மற்றும் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக விளங்கும் சென்னை மாநகர விரிவாக்கத் திட்டத்தை உடனடியாகக் கைவிட மாநில அரசை வலியுறுத்துகின்றோம். தற்போதைய சிக்கல்களுக்கும் தேவைகளுக்கும் தொலைநோக்குப் பார்வையுடன் தீர்வுகள் காணவும் மாற்றுவழிகளை செயல்படுத்தவும் கோருகின்றோம். ●



# மக்களை அச்சுறுத்தும் புற்றுநோய்

மக்களை அச்சுறுத்தும் நோய்களில் ஒன்றான புற்றுநோய் மருத்துவத்துறையில் மிகப்பெரிய சவாலான ஒரு நோயாகவே இருக்கிறது. ஏழை, பணக் காரன், உயர்ந்தவர், தாழ்ந்தவர், நல்லவர், கெட்டவர் என்ற பாகுபாடு இல்லாமல், உலக மக்களில் 8 மில்லியன் பேர் இந்த கேன்சர் நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர். இன்றளவும் முழுமையான மருந்து கண்டுபிடிக்கப்படவே இல்லை.

புற்றுநோய் பற்றி நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். நோய் கண்டவர்களையும் பார்த்திருக்கிறோம். இது ஒரு கொடிய நோய். இந்நோய் வந்துவிட்டால் மிகவும் வேகமாகப் பரவும். இரத்தத்தில் வரலாம், கட்டியாக வரலாம், எலும்புகளில் வரலாம் பல விதங்களில் இது மனிதர்களைப் பாதிக்கிறது. உண்மையில் இந்நோயைப் பார்த்து அச்சப்படத் தேவையில்லை. இது ஒரு வகையான பூஞ்சைக் காளான் நோயாகும். இந்நோயை வெல்ல தமிழ் நூல் கூறும் மருத்துவம்.

*வினையான வினையது அதிகமானால் பொல்லா சூது வரும்*

*விட்டொழியும் பொய்யும் பிரட்டும் உலகில் வலம் வரும்*

*பூஞ்சையும் நஞ்சும் இடமறியாமல் உடலில் பொங்கி வரும்*

*பூவுலகில் மருந்தில்லை என்று ஓடுவான் பொய் மருத்துவன்*

*நோயறிந்த பின் வழி தெரியாமல் அழியும் மக்கள் கோடா கோடி*

*நல்வேளையும் நாகதாளியும் முறைப்படி எடுத்து உப்பாக்கினால்*

*உனக்கு நிகர் வைத்தியன் பூமியில் இல்லை என்பார்கள் சான்றோர்*

*பூஞ்சையும் நஞ்சும் பூண்டோடு விட்டு விலகும் தானே!*

புற்றுநோய் என்பது நம் உடலுக்கு நஞ்சை விளைவிக்கும் ஒருவகையான பூஞ்சைக் காளான் என்பதை இக்கவி உணர்த்தியுள்ளதோடு அதற்கான மருந்தையும் தெரிவிக்கிறது.

இதில் நல்வேளை என்ற மூலிகை என்பது தைவேளைச் செடியைக் குறிக்கும். நாகதாளி என்பது ஒரு வகையான கொடி, இதன் பூ பாம்பு போல் சீறிக் கொண்டிருப்பதைப் போல் தோன்றும். இந்த இரண்டையும் எடுத்து உப்பாக்கிக் கொடுத்தால் நோய் தீரும் என்று இக்கவிதை கூறுகிறது.

நாகதாளியை பனி அதிகமாகப் பெய்யும் காலங்க ளில்தான் காண முடியும். இரண்டு மூலிகைகளையும் உப்பாக்கி வைத்து சூரிய ஒளியில் காய வைக்க வேண்டும். அதன் பின் உப்பை நன்றாகப் பொடியாக்க வேண்டும்.

இது சோடியம் பை கார்பனேட் என்ற வேதிப் பொருளாகும். 2008ஆம் அண்டு சிமோன்சினி என்ற இத்தாலி நாட்டு மருத்துவர் சோடியம் பை கார்பனேட் என்ற உப்பைக் கொண்டு கேன்சர் நோயைக் குணப்படுத்தலாம் என்று கூறியிருக்கிறார். இந்த உப்பால் பலருக்கு புற்றுநோய் குணமாகியிருக்கிறது என்றும் கூறியிருக்கிறார்.

நாளும் காலை 1 தேக்கரண்டி சோடியம் பை கார்பனேட் மருந்தை ஒரு குவளை தண்ணீரில் நன்றாகக் கலக்கி ஒரு வாரத்திற்கு குடிக்க வேண்டும். அதன் பின்னர் இரண்டாவது வாரத்தில் இருந்து காலை ஒரு தேக்கரண்டி மருந்தும் இரவு அரை தேக்கரண்டி மருந்தும் உட்கொள்ள வேண்டும். மூன்று மாதம் இவ்வாறு தொடர்ந்து சாப்பிட்டாலே புற்றுநோய் குணமாகிவிடும்.

நோயாளிகள் மருந்து சாப்பிடும்போது சோர்ந்து விட்டால் ஓரிரு நாட்கள் மருந்து உட்கொள்ளாமல் தவிர்த்து பின் தொடரலாம் ●



கள்ளிறக்கும் தொழிலாளர்கள் அறிவு வளர்ச்சி பெறும் பொருட்டு, அவர்களிலே மிகச் சிலராக இருந்த எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்காக தண்டையார் பேட்டையில் ‘தமிழ்த் தாய் நூல் நிலையம்’ என்ற பெயரில் நூலகம் ஒன்றை நடத்தினேன். ஏராளமான தமிழ் நூல்களைச் சேகரித்து, அந்த நூலகத்தைப் பலப் படுத்தினேன். திரு. த. சி. கங்காதர கிராமணியார் என்பவர் கைம்மாறு கருதாமல் தந்த இடத்தில்தான் நூல் நிலையத்தை அமைத்தேன். பின்னால் தமிழகம் முழுவதற்கும் நலம் பயக்கும் நூலக இயக்கத்தில் இறையருள் என்னை ஈடுபடுத்தப் போகிறது என்பதை அறியாமலே அதற்கு முன்னோடியாக தமிழ்த்தாய் நூலகத்தை நடத்தினேன். ஆம், தமிழ்நாடு அச்சகத் தொழிலாளியாக இருந்து கொண்டே அங்கே மெய் வருந்த உழைத்துக் கொண்டே கிராமணி குல மகாசன சங்கம், கள் தொழிலாளர் சங்கம், தமிழ்த்தாய் நூல் நிலையம், ‘கிராமணி குலம்’ பத்திரிகை ஆகியவற்றை நான் நடத்தி வந்தேன். இந்த நிறுவனங்களிட மிருந்து எத்தகைய ஊதியத்தையோ, உதவியையோ நான் எதிர்பார்த்த தில்லை. இயற்கையாக எனக்குக் கிடைத்ததமில்லை. கிராமணி குல மகாசன சங்கம் நடத்தியதால், கள்ளுக் கடை வணிகர்களாக இருந்து வந்த பெரும் பணக்காரர்கள் சிலருடன் எனக்குத் தொடர்பேற் பட்டது. அவர்களில் திரு. வ. சே. சேசாசல கிராமணியார், திர. சி தரணிசிங்கு கிராமணியார் போன்ற செல்வந்தர்

# திரு. ம.பொ.சி அவர்களது “எனது போராட்டம்” என்ற நூலில் இருந்து...

சிலரின் நல்லெண்ணத்திற்கும் நட்புக்கும் நான் பாத்திரனானேன். அவர்களிடமிருந்தும் என் சொந்த வாழ்க்கைக்காக எந்த உதவியையும், சலுகையையும் பெற நான் நினைத்தது இல்லை. பணக்காரர்களின் நட்பைப் பெற்று குலத் தொண்டில் ஈடுபட்டிருந்த காலத்திலும் நானும் என் குடும்பத்தினரும் பசி, பட்டினியிலிருந்து விடுதலை பெறாதவர்களாகவே இருந்தோம். பொது வாழ்க்கை வேறு, சொந்த வாழ்க்கை வேறு என்ற பண்பாட்டுடன் வாழ அப்பொழுதே நான் பழகிக் கொண்டேன். அந்த நல்ல பழக்கம் இன்றுவரை என்னை விட்டு நீங்கவே இல்லை.

கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத்தின் மூலம் குலத்தொண்டில் ஈடுபட்டிருந்த காலத்திலேதான் அப்போது ஜஸ்டிஸ் கட்சியின் பிரச்சாரப் பீரங்கியாகத் திகழ்ந்திருந்த திரு. சி. என். அண்ணாதுரை அவர்களுடன் நட்பு கொள்ளும் நல்ல வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அப்போது அவர் "திராவிடன்" நாளிதழின் துணை ஆசிரியராக இருந்தார். சென்னையிலுள்ள கள்ளுக்கடைகள் அனைத்தையும் திரு. இதாலியா என்ற வட இந்திய வணிகர் ஒருவர் மொத்த குத்தகைக்கு எடுக்க முன் வந்தார். சென்னை மாநில அரசும் அதற்கு இசைவதாக இருந்தது. அது நிகழ்ந்திருந்தால் கிராமணி சாதியினர் கள்ளிறக்கும் தொழிலையும், கள் வாணிபத்தையும் அடியோடு இழந்து வேலையில்லாத கொடுமையால் வீழ்ந்து போக நேர்ந்திருக்கும். கிராமணி சாதியினர் மதுத் தொழிலிருந்து விடுபடுவதை நான் விரும்பினேன். என்றாலும், அந்தச் சாதியினரையே அழித்துவிடக் கூடிய விபத்தாக அது முடிந்துவிடக் கூடாதல்லவா! அதனால், இதாலியாவின் முயற்சியை முறியடிக்க முனைந்தேன். அரசியல் கட்சிகளின் உதவியைப் பெறாமல் அதைச் சாதிக்க இயலாதென்றறிந்தேன். மதுவிலக்கை விரும்பும் காங்கிரஸ் கட்சியின் உதவி கிடைக்காதென்பதையும் அறிந்திருந்தேன்.

சென்னை மேலவைத் தலைவராகவும் பம்பாய் கவர்னராகவும் பிற்காலத்தில் பதவி வகித்த டாக்டர் செரியன் அவர்களின் மைத்துனர் திரு. ஆல்பர்ட் ஜேசுதாசன் என்பவர் சென்னைத் துறைமுகத் தொழிலாளர் சங்கத் தலைவராக இருந்தார். அவர் ஜஸ்டிஸ் கட்சிக்காரர். நான் வெறிபிடித்த காங்கிரஸ்காரன். இப்படி, இருவேறு துருவங்களாக இருந்த நாங்கள் இணைபிரியாத நண்பர்களாக இருந்தோம். ஆல்பர்ட் ஜேசுதாசனின் துணை கொண்டு இதாலியாவின் முயற்சியை முறியடிக்க நண்பர் அண்ணாதுரையின் உதவியை நாடினேன். அண்ணாவும் ஜேசுதாசனும் நெருங்கிய நண்பர்கள். அப்போதுதான் அரசியல் அடிவானத்தில் தோன்றிக் கொண்டிருக்கும் உதயசூரியனாக அண்ணா வளர்ந்து கொண்டிருந்தார். அவரை அப்போது தான் முதன் முதலாக ஆல்பர்ட் ஜேசுதாசனுடன் சென்று 'திராவிடன்' அலுவலகத்தில் சந்தித்தேன். இது நிகழ்ந்தது 1936 ஆம் ஆண்டின் முற்பகுதியிலாகும்.

அண்ணாவைச் சந்தித்ததன் விளைவாக, சென்னை உயர்நீதி மன்றத்தின் அருகிலுள்ள கடற்கரையிலே இதாலியா என்ற வட இந்தியருக்கு சென்னைக் கள்ளுக் கடைகளை ஏகபோக குத்தகைக்கு விடும் செயலைக் கண்டித்து ஒரு மாபெரும் கூட்டத்தை நடத்தினேன். அந்தக் கூட்டத்திலே அன்பர் ஆல்பர்ட் ஜேசுதாசனும் அண்ணாவும் பேசினார்கள். கள்ளிறக்கும் தொழிலாளர்களும் கள் வாணிபத்தில் ஈடுபட்டுள்ள சிப்பந்திகளும் பல்லாயிரக் கணக்கில் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அதில் நானும் பேசினேன் என்று சொல்லத் தேவையில்லையல்லவா!

பின்னர் ஆல்பர்ட் ஜேசுதாசன், திரு. த. சே. உமாபதி, திரு. பாசுதேவ் எம். எல். சி. ஆகியோரை அழைத்துக் கொண்டு அப்போது கோடை வாசத்திற்காக உதகையில் தங்கியிருந்த சென்னை மாநில அரசின் கலால் இலாகா செயலாளரைக் கண்டு இதாலியாவுக்குக் குத்தகை விடும் முயற்சியைக் கைவிடுமாறு கள் தொழிலாளர் சார்பில் அவரிடம் விண்ணப்பம் கொடுத்தேன். சில வாரங்களுக்குப் பின்னர் அவரிடமிருந்து ஏமாற்றகரமான பதில் கிடைத்தது. ஆனால், முயற்சியை அத்துடன் நான் விட்டுவிடவில்லை. நகரில் பல இடங்களில் கூட்டங்கள் நடத்தி, அரசைப் பயமுறுத்தும் வகையில் கிளர்ச்சி செய்தேன். அதன்பின் இதாலியாவுக்கு மொத்தக் குத்தகை விடும் முயற்சியை அரசு கைவிட்டது. இது, அரசுக்கு எதிரான ஒரு கிளர்ச்சியில் ஈடுபட்டு, நான் அடைந்த முதல் வெற்றியாகும்.

கிராமணி சாதியிலே, தமிழ்ப் புலவர்கள் எண்ணற்றோர் வாழையடி வாழையெனத் தோன்றியிருக்கின்றனர். அவர்கள் எல்லாம் பிற்பட்ட சாதியில் பிறந்த காரணத்தால் விளம்பரம் இல்லாமல் வாழ்ந்து மறைந்தனர். சிறந்த நாடகாசிரியர்களும் இருந்தனர். ஏகை சிவசண்முகம் பிள்ளை என்பவர் நாடக உலகில் புகழ்பெற்ற "கண்டிராஜா", "சம்பூர்ண ராமாயணம்" ஆகிய நாடகங்களை எழுதிச் சிறப்புப் பெற்றார். இவரை நான் சந்தித்ததில்லை என்றாலும், இவரைப் பற்றி என் இளம் பருவத்திலேயே நான் நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். இவருடைய சம்பூர்ண ராமாயண நாடகத்தை இன்று என் இணைபிரியாத தோழர்களாகவுள்ள டி.கே.எஸ். சகோதரர்கள் நடத்தியிருக்கின்றனர்.

மற்றோர் நாடகாசிரியர் டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் தமையனார் தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலராவார். இவர், பதிபக்தி,

பஞ்சாப் மெயில், கதரின் வெற்றி, தேசியக் கொடி ஆகிய நாடகங்களை நடத்தி, நாட்டில் தேசபக்தியை வளர்த்தார். இந்தத் துறையிலே இவர் ஈடு இணை யற்று விளங்கினார். இவருடன் நான் அதிகம் நெருங் கிப் பழகியதில்லை என்றாலும், தெ. பொ. மீ. அவர் களைப் பார்ப்பதற்காக அவரது இல்லம் சென்ற நாட் களில் பாவலரையும் சந்தித்திருக்கிறேன். அப்போது அவர் கடுமையாக நோயுற்றுப் படுக்கையிலிருந்தார். பாவலருடைய நாடகங்களைப் பார்த்து தேச பக்தியை வளர்த்துக் கொண்டவர்களிலே நானும் ஒருவன். பாவலரவர்கள் சிறுவர் சிறுமியர் அடங்கிய நாடகக் குழு ஒன்றை இலண்டனுக்கு அழைத்துச் சென்று, அங்கு நடந்த வெம்பிளிக் கண்காட்சியிலே தமது நாடகங்களை நடத்தினார். நாடகக் கலைக்கும் நாட்டின் விடுதலைக்கும் இவர் ஆற்றிய தொண்டு களைக் கலையுலகும் அரசியல் உலகும் மறந்தே போய்விட்டன.

கள்ளிறக்கும் தொழிலாளர்களிலிருந்து கவிஞர் சிலரும் தோன்றினார்கள் என்றால், பலருக்கு வியப்பேற்படக்கூடும். வானுயர வளர்ந்திருக்கும் தென்னை மரத்தின் உச்சியை நோக்கி ஏறிக் கொண்டிருக்கும் போதே உள்ளத்தில் கவிதை பிறந்து விட்டால், மரம் ஏறுவதை நிறுத்தி, ஏடும் எழுத்தாணியும் கொண்டு கவிதை எழுதுவார்களாம்! அப்படிப்பட்ட கவிஞர்களிலே கந்தசாமிக் கவிராயர், காமியப்ப கவிராயர் ஆகியோர் முக்கியமானவர் களாவர். இவர்கள் எழுதிய பக்திக் கீர்த்தனைகளையும் சிருங்காரக் கீர்த்தனைகளையும் நான் படித்திருக்கிறேன். ஆம், கையெழுத்துப் பிரதிகளாக இருந்த நிலையிலே! அருமையான கீர்த்தனைகள்! தமிழிலே இசைப் பாடல்கள் இல்லையென்ற குறையகற்றும் கீர்த்தனை கள்! துரதிருஷ்டவசமாக, அவை இன்னமும் நூல் வடிவம் பெற்றதாகத் தெரியவில்லை. பிற்பட்ட சாதியில் தோன்றிய கவிஞர்கள் புனையும் கவிதைகளும் பிற்பட்டுவிடும் போலும்! தமிழின் தலையெழுத்தை என்னென்பது!

சாதி முகாமிலிருந்து நான் விடுதலை பெறுவதற்கு மற்றொரு காரணமும் இருந்தது. அதனையும் இங்கு நான் கூறியாக வேண்டும். கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கம் ஒன்றை நிறுவி, எத்தனையோ இன்னல்களுக் கிடையே அதனை நான் நடத்தி வந்த போது, அதற்குப் போட்டியாக, தொழிற்சங்க இயக்கத்தைச் சார்ந்த சிலர் மற்றொரு சங்கத்தைத் தோற்றுவித்தனர். அவர்களிலே முக்கியமானவர்கள் என்னுடைய மதிப்புக்குரிய தோழர்களான ஜீவானந்தமும் பி. இராமமூர்த்தியு மாவர். போட்டிச் சங்கம் தோன்றிய சில வாரங் களிலேயே அதன் தூண்டுதலால் கள்ளிறக்கும் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. இந்த வேலை நிறுத்தத்தை நான் விரும்பவில்லை. கள்ளிறக்கும் தொழிலாளர்களும் கள் வணிகர்களும் ஒரே சாதியினராதலால் அவர்களுக்குள்ளே வர்க்க ரீதியில் நடைபெறும் போராட்டமானது பிற்பட்டுக் கிடக்கும் கிராமணி சாதியினரின் முன்னேற்றத்தைத் தடை செய்து விடுமென்று நான் கருதினேன். ஆயினும், வேலை நிறுத்தத்திற்கான நியாயத்தை நான் உணர்ந்திருந்தேன். சமரசத் தூதுவனாக வேலை செய்து, கள் தொழிலாளர்களின் கூலியை உயர்த்திக் கொடுப்பதிலே கொஞ்சம் விட்டுக் கொடுக்குமாறு கள்ளுக்கடை வணிகர்களை வேண்டினேன். அவர் களிடம் எனக்குள்ள செல்வாக்கை உபயோகப்படுத்தி ஆலோசனை கூறினேன். அந்த வகையில் எனது 'கிராமணி குலம்' பத்திரிகையில் நான் எழுதியவற்றை இன்றும் காணலாம். ஆனால், எனது சமரச முயற்சி வெற்றி பெறுமுன்னர் போலீசார் அடக்குமுறையில் இறங்கிவிட்டனர். தோழர் ப. ஜீவானந்தம், தோழர் பி. இராமமூர்த்தி ஆகியோருக்கு 144 தடை உத்தரவு வழங்கப்பட்டது. தனிப்பட்ட முறையிலும் எனக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்த இவர்கள் காங்கிரஸ் பணியிலேயும் எனக்கு சகாக்களாக விளங்கினர். அப்போது காங்கிரசின் உள் கட்சியாக விளங்கிய காங்கிரஸ் சோசலிஸ்டுக் கட்சியிலே இவர்கள் கலந்திருந்தனர்.

கள்ளுக்கடை முதலாளிகளின் பக்கம் சார்ந்து சாதிப் பற்றுக் காரணமாக கள் தொழிலாளர்களுக்கு விரோதமாக வேலை செய்வதோ, என் மதிப்புக்குரிய அரசியல் தோழர்கள் மீது அரசு மேற்கொண்டுள்ள அடக்குமுறை நடவடிக்கைகளை ஆதரிப்பதோ என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதவையாக இருந்தன. அதனால், தொழிற்சங்க ரீதியில் சோசலிஸ்டு களால் தொடங்கப்பட்ட கள் தொழிலாளர் சங்கம் நீடிக்கவும் நிலைக்கவும் வழிவிட விரும்பி, சாதி ரீதியில் நான் நடத்தி வந்த கள் தொழிலாளர் சங்கத்தைக் கலைத்து விட்டேன். வியப்பென்னவென்றால், என்னால் நடத்தப்பட்ட சங்கம் கலைக்கப்பட்ட சில மாதங்களிலேயே தொழிற்சங்க இயக்கத் தலைவர் களால் நடத்தப்பட்ட சங்கமும் கலைந்து போய் விட்டதாகும்.

இதனாலும், 1934இல் குலத் தொண்டில் புகுந்த நான், 1937 இறுதியிலே அந்தத் துறையிலிருந்து வெளியேறினேன். அதன்பின் எத்தனையோ முறை, எத்தனையோ நண்பர்கள் என்னை நிர்பந்தித்தும் சுயசாதி ஸ்தாபனத்தோடு தொடர்பு கொள்ள விரும்பாதவனானேன். ஆயினும், தனிப்பட்ட முறையில் பிற்பட்ட சாதியினர் என்ற காரணத்துக்காக கிராமணி சாதியினர் முன்னேற்றத்திற்கு என்னால் ஆனதைச் செய்ய நான் தவறியதே இல்லை.

சிலம்புச் செல்வர் **ம.பொ.சி.,**

அ.தி.மு.க. அணிகள் இணைந்ததே பிரதமர் மோடி அறிவுரைப்படிதான் என்று துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ்.வெளிப்படையாகவே அறிவித்தார். அந்த அளவுக்குத் தலையிட முடிந்த பிரதமரால், காவிரி மேலாண்மை வாரிய விவகாரத்தில் அதிமுக தலைவர்களை அழைத்துப்பேசி, நம்பிக்கை ஏற்படுத்தி யிருக்க முடியாதா?

அப்படிச் செய்யவில்லை என்பதே, நாடாளு மன்றத்தைத் தொடர்ந்து அதிமுக எம்பிக்கள் முடக்கி யதன் மூலம், பாஜ.கவுக்கு சாதகமாக அவர்கள் செயல்படுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட நம்பிக்கையில்லாத தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள விடாமல் தவிர்க்கிற ஒரு நாடகம்தான் இது என்பதைக் காட்டுகிறது.

நாடாளுமன்றத்தில் இப்படி பாஜகவுக்கு சாதகமாக அதிமுக செயல்படுகிறது என்றால் அதற்கு மறு உதவியாகத் தமிழகத்தில் அதிமுக அரசின் மீதான விமர்சனங்கள் மக்களிடையே பரவாமலும் முன்னுக்கு வராமலும் தடுப்பதற்கு உதவியாக, மதப்பிரச்சனை உள்பட தேவையற்ற சர்ச்சைகளை பாஜக எழுப்பு கிறது.

2014க்குப் பிறகு நாடாளுமன்றம் கூடியபோ தெல்லாம், எதிர்க்கட்சிகள் வலியுறுத்திய முக்கிய பிரச்சனைகளை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள மறுத்து, அமளி ஏற்படுவதற்கு இட்டுச் சென்று, நாடாளுமன்றத்தையே முடக்கி வந்திருக்கிறது பாஜக அரசு. 2014க்கு முன் எதிர்க்கட்சியாக இருந்த காலத்திலும் நாடாளுமன்றத்தை முடக்கி, மற்ற கட்சிகள் முக்கியப் பிரச்சனைகளை எழுப்ப விடாமல் தடுத்து வந்தது பாஜக.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக அறிவிக்கப்படுமா என்ற கேள்வி நாடாளு மன்றத்தில் எழுப்பப்பட்டபோது, உச்சநீதி மன்றம் அதை ஏற்காததால் அப்படியொரு சட்டம் கொண்டுவரும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று சட்ட அமைச்சர் சொன்னார். அந்தப் பிரச்சனையில் உச்சநீதிமன்றத் தைக் கைகாட்டி நழுவுகிற பாஜக அரசு, அதே உச்சநீதி மன்றம் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று பிறப்பித்துள்ள ஆணையை ஏற்க மறுப்பது ஏன்?

கண்டிப்பாக வாரியம் அமைக்கப்படும் என்ற நம்பிக்கை இருப்பதாக தமிழக பா.ஜ.கதலைவர்கள் கூறுகிறார்கள். அந்த நம்பிக்கையை அதிமுக எம்பிக்



களுக்கு மத்திய அரசு அளிக்கத் தவறியது ஏன் என்ற (நெறியாளுநரின்) கேள்விக்கு ஒரு துணைக் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். அப்படியானால் அதிமுக எம்பிக்கள் தொடர்ந்து அவையை முடக்கி வருவதற்கு வேறு நோக்கம் இருப்பதாக பாஜக நினைக்கிறதா?

மார்ச் மாதம் 29ஆம் தேதி வரையில் பொறுமை யாக இருப்போம் என்று தமிழக சட்டமன்றத்தில் அதிமுக அரசு கூறியது. இது அக்கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர்களுக்குப் பொருந்தாதா? அவர்கள் பொறுமையாக இல்லாமல் நாடாளுமன்றத்தை முடக்கி வருவது எதற்காக?

கேரளத்தில் மார்க்சிஸ்ட் கட்சி தலைமையிலான அரசு, உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்க மறுக்க வில்லை. காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தால் அது கேரளத்திற்கும்தான் பயனளிக்கும். ஆகவே, கேரள அரசு உச்சநீதிமன்றத் தீர்ப்பில் உள்ள நீர் அளவு உள்ளிட்ட ஆணைகள் தொடர்பாக விளக்கம் கேட்டிருப்பதில் வேறு உள்நோக்கம் கிடையாது.

தீர்ப்பைச் செயல்படுத்துவது, தொடர்பாக மாநில மக்களுக்கு எடுத்துரைப்பதற்காகவும், எதிர்க்கட்சி களுக்குச் சொல்வதற்காகவும், செயல்படுத்துவதில் நடை முறைச்சிக்கல்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் நீதிமன்ற ஆணை தொடர்பாக விளக்கம் கேட்பதில் தவறு ஒன்றுமில்லை.

அதேபோல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கர்நாடக மாநிலக்குழு, வாரியம் உள்ளிட்ட உச்சநீதி மன்றத் தீர்ப்பை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும் என்று தான் வலியுறுத்தியிருக்கிறது. தேர்தல் ஆதாயக் கணக்குப் போட்டு, பாஜக காங்கிரஸ் போல இந்தத் தீர்ப்புக்கு எதிரான நிலைப்பாட்டை மார்க்சிஸ்ட் கட்சி எடுக்கவில்லை.

தமிழகத்தில் 90 சதவீத மக்கள் அதிமுக அரசின் இந்த அணுகுமுறையை வரவேற்பதாக இங்கே சொல்கிறார் அக்கட்சியின் பிரதிநிதி. அதற்காக மக்களிடம் ஏதாவது கருத்துக்கணிப்பு நடத்தப் பட்டதா? ஆனால், இந்த விவாதம் நடந்து கொண்டிருக்கும்போதே, சமூக ஊடகத்தில் (முகநூல்) பதிவு செய்யப்படும் கருத்துகளில் பெரும்பாலனவை இது நாடகம்தான், பாஜகவுக்குத்தான் சாதகம் என்றுதான் வருகின்றன.

புதிய தலைமுறை தொலைக்காட்சியின் (மார்ச் 23) நேர்படப் பேசு நிகழ்ச்சியில் நான் கூறிய கருத்துகளின் சாரம். உடன் பங்கேற்றோர் கோவை செல்வராஜ் (அதிமுக) செல்வப் பெருந்தகை (காங்கிரஸ்) துரை கருணா பத்திரிகையாளர், ஸ்ரீனிவாசன் பாஜக மதுரையிலிருந்து நெறியாளுகை: செந்தில் வேல்.

**திரு. குமரேசன்.**

# மோடியிசம்?



இரண்டு மாடு வைத்திருப்பவன் ஒன்றை அடுத்தவனுக்கு கொடுத்தால் அது சோசியலிசம் SOCIALISM

இரண்டு மாடு வைத்திருப்பவன் இரண்டையும் அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டு தேவையான பாலை மட்டும் வாங்கிக் கொண்டால் அது கம்யூனிசம் சிளிவிவிஹிழிமிஷிவி

இரண்டு மாடிகளிலும் பால் கரந்து தானே பயன்படுத்தினால் ஜனநாயகம் DEMOCRACY

ஒரு மாட்டை விற்று காளை வாங்கி, குட்டிபோட வைத்து பண்ணையாக்கினால் கேப்பிடலிசம் CAPITALISM

இரண்டு மாட்டை அரசாங்கம் பிடுங்கிக் கொண்டு வைத்திருந்த ஓனரை கொன்றுவிட்டால் அது நாசிசம் NAZISM

இரண்டு மாட்டையும் அரசு பிடுங்கிக் கொண்டு அவனிடமே அந்த பாலை விற்றால் அது பாசிசம்

இரண்டு மாட்டையும் அரசு பிடுங்கி, அம்பானி, அதானிக் கிட்ட சும்மா கொடுத்துட்டு பால் பண்ணை வைக்க மக்கள் இடத்தையும் பிடிங்கிக் கொடுத்துட்டு, பாலை விக்க வங்கி மூலம் அம்பானிக்கு கடனும் கொடுத்துட்டு பாலை மாட்டுக் காரங்கட்டயே வித்தா அது நம்ம மோடியிசம் MODISM

பகிரி.

# கர்நாடகத்தின் சட்ட விரோதச் செயல்களை ஊக்கப்படுத்துகிறது உச்ச நீதிமன்றம்!

உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட ஆயம், 09.04.2018 காவிரி வழக்கில் கூறிய முடிவுகள் நீதித்துறையின் மாண்புக்கு இழுக்கு உண்டாக்குவதாக உள்ளன.

கடந்த 16.02.2018 அன்று தீபக் மிஸ்ரா ஆயம் வழங்கிய காவிரித் தீர்ப்பில் கர்நாடகம் மாதவாரியாகத் தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய தண்ணீரைக் கர்நாடக அணைகளில் திறந்துவிட்டு மூடும் அதிகாரம் கொண்ட காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டுமென்று கூறாமல், "ஒரு செயல்திட்டத்தை" அமைக்க வேண்டுமென்று கூறியது அச்செயல் திட்டத்தை தீர்ப்பு வழங்கிய நாளிலிருந்து ஆறு வாரங்களுக்குள் அதாவது 29.03.2018க்குள் நிறுவ வேண்டுமென்று கூறியிருந்தது.



ஆனால் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசு, அந்த ஒரு செயல்திட்டத்தையும் அமைக்காமல் செயல்திட்டம் என்பதற்கு விளக்கம் கேட்டும், அதை அமைப்பதற்கு மேலும் 3 மாதம் கால நீட்டிப்பு கேட்டும் உச்ச நீதிமன்றத்தில் புதிய மனு ஒன்றை 31.03.2018 அன்று தாக்கல் செய்தது. உச்ச நீதிமன்றம் விதித்த கெடுவுக்குள் நடுவண் அரசு காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கவில்லை என்று கூறி, அதன் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குப் பதிவு செய்யுமாறு தமிழ்நாடு அரசு மனு போட்டது.

இவற்றையெல்லாம் ஒன்றாக்கி 09.04.2018 தீபக் மிஸ்ரா ஆயம் விசாரணை நடத்தியது. தான் விதித்த காலக்கெடுவுக்குள் "செயல்திட்டம்" ஒன்றை ஏன் அமைக்கவில்லை என்று கேள்வி கேடட உச்சநீதி மன்றம், இந்திய அரசின் இச்செயல் தனக்கு வியப் பளிப்பதாகக் கூறியது. ஆனால் அதற்காக இந்திய அரசைக் கண்டிக்கவில்லை. ஆனால், நடுவணரசு கேட்ட கால நீட்டிப்பை மறைமுகமாக அதே தீபக் மிஸ்ரா ஆயம் வழங்கியுள்ளது.

அதாவது, 2018 மே 3ஆம் நாளுக்குள் காவிரி செயல்திட்டம் பற்றிய வரைவை உச்ச நீதிமன்றத்தில் நடுவணரசு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அந்த வரைவை உச்ச நீதிமன்றம் பரிசீலனை செய்து தகுந்த ஆணையிடும் என்றும் கூறியுள்ளது. இதன் பொருள், மே 3ஆம் நாள் செயல்திட்டம் குறித்த வரைவை இந்திய அரசு அளித்தாலும் அன்றே அதன் மீது தீர்ப்பு வராது! அதை உச்ச நீதிமன்றம் பரிசீலித்து முடிவெடுக்க பிறகொரு நாளில் வாய்தா போடும் என்பது உறுதி யாகிறது. அதாவது, மே 12 இல்

**காவிரி உரிமை மீட்புக் குழு ஒருங்கிணைப்பாளர் பெ. மணியரசன் அறிக்கை!**

நடைபெற வேண்டிய கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தல் அதற்குள் முடிந்து விடும்! எவ்வளவு தந்திரமான தீர்ப்பு இது!

அடுத்து, தங்களது 16.02.2018 தீர்ப்பில், “காவிரி மேலாண்மை வாரியம்“ என்ற சொற்றொடரை பயன்படுத்தவில்லை என்று 09.04.2018 விசாரணையில் தீபக் மிஸ்ரா கூறினார்.

அடுத்து, மிக முக்கியமான ஒரு கருத்தை தீபக் மிஸ்ரா மேற்படி விசாரணையின் போது கூறினார். 2007இல் வழங்கப்பட்ட காவிரித் தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பு பற்றி நடுவணரசு கவலைப்பட வேண்டியதில்லை, அந்தத் தீர்ப்பு உச்ச நீதிமன்றத் தீர்ப்போடு பிணைக்கப்பட்டு விட்டது என்றார். 16.02.2018 தீர்ப்பில், தமிழ்நாட்டிற்குத் தர வேண்டிய கண்ணீரின் அளவைக் குற்றத்தைத் தவிர, காவிரி தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பில் நாங்கள் கைவைக்கவில்லை என்று கூறிய தீபக் மிஸ்ரா ஆயம், காவிரி மேலாண்மை வாரியம் என்பதை நாங்கள் கூறவே இல்லை என்று கூறுகிறது. காவிரித் தீர்ப்பாயத்தின் அதிகாரம் அதன் கட்டமைப்பு அனைத்தையும் தீர்ப்பாயம் துல்லியமாக வரையறுத்துள்ளது.

அதாவது தீர்ப்பாயத்தின் தீர்ப்பை தீபக் மிஸ்ரா ஆயம் விழுங்கிவிட்டது என்பதை மறைமுகமாகக் குறிக்கத்தான் அத்தீர்ப்பு உச்ச நீதிமன்றத் தீர்ப்புடன் பிணைக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்களோ?

தமிழ்நாடு அரசு, நடுவணரசுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் கதி என்ன? ஏன் அதைப் பற்றி ஒரு வார்த்தையும் இல்லை?

கர்நாடக அரசின் சட்டவிரோதச் செயல்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பும் விசாரணையும் அமைந்துள்ளன. இந்த விசாரணை (09.04.2018) மேலும் கால நீட்டிப்பு வழங்கியதுடன், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டியதில்லை, “ஏதோவொரு செயல்திட்டம் இந்திய அரசு அமைத்தால் போதும் என்று 09.04.2018 கூறியதால் உற்சாகமடைந்த கர்நாடகத் தரப்பினர் 12.04.2018 அன்று நடத்தவிருந்த கர்நாடக முழு அடைப்பைக் கைவிட்டனர். உச்ச நீதிமன்றம் கர்நாடகத்துக்குச் சாதகமாகத்தான் இருக்கிறது என்பதை ஒளிவு மறைவின்றி கர்நாடகத் தரப்பு வழக்கறிஞர் காதர்க்கி 09.04.2018 அன்று கூறியுள்ளார்.

நீதிமன்றக் கட்டளையை செயல்படுத்த மறுத்த நடுவண் அரசின் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு போட வேண்டும் என்று கேட்டுக்கொண்ட தமிழ்நாடு அரசின் மனுவை உச்சநீதிமன்றம் கண்டுகொள்ளாமல் ஒதுக்கித் தள்ளிவிட்டது!

## இந்தியாவில் தமிழர்கள் உரிமைப் பறிக்கப்பட்ட இனமாக - ஓர் ஒதுக்கப்பட்ட இனமாக வைக்கப்பட்டுள் ளோம் என்ற உண்மையை உணர்ந்து, தமிழ்த்தேசிய உரிமைக்கு தமிழர்கள் கிளர்ந்தெழ வேண்டும்!

இவ்வளவு பாதகங்கள் இருந்தும், உச்ச நீதிமன்றத்தின் இந்த விசாரணை முடிவுகள் தமிழ்நாடு அரசுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்று உச்ச நீதிமன்ற வளாகத்தில் தமிழ்நாடு சட்ட அமைச்சர் சிவி.சண்முகம் கூறியது இனத்துரோகச் செயலாகும்!

மே மாதம் 3க்குப் பிறகும் கர்நாடக அணைகளைத் திறந்து மூடும் அதிகாரம் படைத்த ஒரு செயல் திட்டத்தை இந்திய அரசு உருவாக்காது என்பது வெள்ளிடைமலை!

இந்திய அரசமைப்புச் சட்டம், பன்னாட்டு விதிகள், தீர்ப்பாயத் தீர்ப்பு, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஆகியவற்றை செயல்படுத்த மறுக்கும் இந்திய அரசுக்கு எதிராக முழுமையான ஒத்துழையாமை இயக்கத்தை தமிழர்கள் கடைபிடிக்க வேண்டும். இந்திய அரசு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இயங்காமல் முடக்க வேண்டும். இப்பொழுது எழுந்துள்ள தமிழர்களின் அறச்சீற்றம் சரியான திசை நோக்கி ஒருங்கிணைய வேண்டும்.

இந்தியாவில் தமிழர்கள் உரிமைப் பறிக்கப்பட்ட இனமாக ஓர் ஒதுக்கப்பட்ட இனமாக வைக்கப்பட்டுள் ளோம் என்ற உண்மையை உணர்ந்து, தமிழ்த்தேசிய உரிமைக்கு தமிழர்கள் கிளர்ந்தெழ வேண்டும்!

காவிரி வழக்கில், உச்ச நீதிமன்றம் நடுநிலை தவறியதுடன், இவ்வழக்கிற்கு இந்திய அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு எதிரான பாதகமான முடிவுகளையும் 16.02.2018 தீர்ப்பில் வழங்கியுள்ளது. இதனால் அத்தீர்ப்பை மறு ஆய்வு செய்ய வேண்டும். இவ்வழக்கிற்கு ஐந்து நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அரசமைப்புச் சட்ட ஆயம் நிறுவ வேண்டுமென்ற இலக்கிணை வரையறுத்துக் கொண்டு, இடைக்காலமாக தீர்ப்பாயம் கூறியுள்ள கட்டமைப்புடன் காவிரி மேலாண்மை வாரியம் உடனடியாக அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைத்து ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் மேலும் ஆவேசத்துடன் போராட வேண்டும் என்று காவிரி உரிமை மீட்புக் குழு சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.



# வெண்ணீரின்
## பயன்கள்



இதை அதிக அளவில் பகிர்தல் அனைவரும் பயன் பெற உதவும்

ஒரு ஜப்பானிய மருத்துவர் குழு சூடான தண்ணீர் பருகுவதால் உடலில் உள்ள பல பிரச்சினைகள் தீர்கிறது என்று 100% உறுதிபடுத்தியுள்ளனர்.

மைக்கிரேன், உயர் இரத்த அழுத்தம், குறைந்த இரத்த அழுத்தம், மூட்டு வலி, திடீரென்று இதயத்துடிப்பு அதிகரிப்பு, இதய துடிப்பு குறைதல், கால் கை வலிப்பு,

இருமல், உடல் அசௌகரியம், ஆஸ்துமா,நரம்புகள் தடுப்பு, கருப்பை, சிறுநீர் தொடர்பான நோய்கள், வயிற்று பிரச்சினைகள், பசியின்மை, கண்கள், காது மற்றும் தொண்டை தொடர்பான அனைத்து நோய்களும், தலைவலி

**சுடு நீரைப் பயன்படுத்துவது எப்படி?**

காலையில் எழுந்து, வெறும் வயிற்றில் சுமார் 2 தம்ளர் சூடான நீர் குடிக்க வேண்டும். நீங்கள் ஆரம்பத்தில் 2 தம்ளர் குடிக்க முடியாது. ஆனால், மெதுவாகப் பழக வேண்டும். தண்ணீரை எடுத்துக் கொண்ட பிறகு 45 நிமிடங்கள் எதுவும் சாப்பிட வேண்டாம்.

சூடான நீர் சிகிச்சை உடல்நலப் பிரச்சினை களை குறித்த காலத்திற்குள் தீர்க்கும்

30 நாட்களில் நீரிழிவு நோய் குணமாகும், 30 நாட்களில் இரத்த அழுத்தம் சீரடையும், 10 நாட்களில் வயிற்று பிரச்சனைகள் சரியாகும், 9 மாதங்களில் அனைத்து வகை புற்றுநோய் குணமாகும். 6 மாதங்களில் நரம்பு அடைப்புகள் நீங்கும், 10 நாட்களில் பசியின்மை மாறும். 10 நாட்களில் கருப்பை மற்றும் அது தொடர்புடைய நோய்கள் குணமாகும். மூக்கு, காது மற்றும் தொண்டை பிரச்சனைகள் 10 நாட்களில் சரியாகும். 15 நாட்களில் பெண்கள் வருகின்ற பிரச்சினைகள் தீரும். 30 நாட்களில் இதய நோய்கள் குணமாகும். 3 நாட்களில் தலைவலி சரியாகும், 4 மாதங்களில் கெட்ட கொழுப்புகள் கரையும். 9 மாதங்களில் கால்கை வலிப்பு சரியாகும். 4 மாதங்களில் ஆஸ்துமா குணமாகும்.

**டாக்டர் டி.மென்சா அசரே**

## சொற்கள்

பேச்சு - Speech
உடன் - -Sudden
தாக்கு - Attack
கயிறு - -Coir
கட்டுமரம் - Catamaran
கற்கண்டு - Candy
கட்டில் - Cot
வெற்றி - -Victory
தேக்கு - Teak
ஒன்று -One
மாங்காய் - Mango
காசு - Cash
இஞ்சி - Ginger
ஆறு - அஞ்சு - ஆரஞ்சு
ஆணை கொண்டான் - Anaconda
சுருட்டு - Cheroot
கூலி - Coolie
முருங்கை - Moringa

# தன்னிகரில்லாத் தமிழ்

'தமிழுக்கு அமுதென்று பெயர்' என்று புல்லரிக்கிறார் பாவேந்தர். தமிழ் எங்கள் உயிருக்கு வேர், வீரம் என்று புகழ்ந்து சிலிர்க்கிறார். யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று உறுதியாகக் கூறுகிறார் பாரதியார்.

உலகில் பழமையான மொழிகள் என்று சொல்லக் கூடியவற்றில் இன்றுவரை அழியாமல் வழக்கில் இருப்பது தமிழ் மட்டுமே. கல்தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி என்று பெருமையுடன் புகழ் பாடுகிறார்.ஒரு கவிஞர். 2,500 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நற்றிணை, தொல் காப்பியம் என்று எழுதப்பட்டு இன்றுவரை அழியாமல் இருக்கிறது. வேறு எந்த மொழியிலும் மொழியின் பெயரை தன் பெயராகச் சூட்டிக் கொள்ள முடியாது. ஆனால் தமிழில் முடியும். தமிழரசி, தமிழ்ச்செல்வன் என்று.

பண்பாடு, கலை, பிறமொழிக் கலப்பின்மை, இலக்கியவளம், உயர் சிந்தனை என்று தனித்து விளங்குவது தமிழ்.

எத்திறத்தினிம் ஏழுலகும் புகழ் முத்தும், முத்தமிழும் தந்து முற்றலால்

என்றுமுள தென்றமிழ்... கம்பர்

ஆடல், பாடல், இசையே தமிழே... சிலப்பதிகாரம்.

சமீபத்தில் பிரதமர் மோடி தமிழ் மொழி மிகவும் இனிமையானது. அது சமஸ்கிருதத்தைவிடப் பழமையானது என்று புகழ்ந்து பேசியிருக்கிறார். தமிழின் காலடி படாத இடம் இல்லை. இமயத்தில் புலிக்கொடி நாட்டியவன், கடாரம் வென்றவன், உலகின் மிகப்பெரும் கோவிலான ஆங்கோர் வாட் ஆலயத்தைக் கட்டியவன் தமிழன். தமிழின் பெருமையை உலகம் முழுவதும் பரப்பியவன். தங்களின் கலை, இலக்கிய பண்பாடுகளை, நாகரிகம், வாழ்க்கை முறைகளை தான் கட்டிய கோவில்கள், படைத்த இலக்கியங்கள் மூலம் வெளிப்படுத்துகிறான்.



ஒரு கவிஞர் தன் உள்ளத்து உணர்ச்சிகளோடு தான் வாழ்ந்த காலத்து மக்களின் வாழ்க்கை முறை, அரசியல் மனித நாகரீகம் என்று சகல விசயங்களையும் பதிவு செய்து விடுகிறான். அவனின் அனைத்து உணர்ச்சிகளையும் வெளிப்படுத்த தகுந்த வார்த்தைகள் தமிழில் நிறைந்து கிடக்கின்றன. தனக்கு நிகரில்லாத தமிழில்தான் எத்தனை அமுதமான தமிழ்ப் பாடல்கள், அகம், புறம், ஐம்பெரும் காப்பியங்கள், பரணி, சைவ, வைணவ நூல்கள், பக்தி இலக்கியங்கள் என்று, அள்ள அள்ளக் குறையாத அமுத ஜீவ ஊற்றாக இருக்கிறது. இவை அனைத்திற்கும் நடுவில் மின்னும் சிறு நட்சத்திரங்களாக தனிப்பாடல்கள் குவிந்து கிடக்கின்றன. சிலேடை, மகிழ்ச்சி, இகழ்ச்சி, இரட்டுற மொழிதல், ஓசை விளையாட்டு,

எழுத்தாளர் கோபிபிரபா

விடு கவி, சித்திரக் கவி, பெருமிதம், நன்றி என்று ஒவ்வொரு கவிதையும் மெய்மறக்கச் செய்து விடுகிறது. விவசாயத்தின் மேன்மை, மேன் மக்களின் இயல்பு, மனிதன் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகள் என்று அது சொல்லாத விசயங்கள் இல்லை. லேசாய் இகழ்ச்சி இழையோட அருவி ஓட்டம் போல் சொல்லிச் செல்கிறது விசயங்களை. இனிக்கும் தமிழில் அழகுச் சொற்களை இணைத்த தமிழன்னையை அழகு செய்து பார்க்கிறது தனிப்பாடல்கள்.

கம்பரின் இராமாயணத்தைவிட அவரின் தனிப் பாடல்கள் தனிச் சுவையுடன் தன்மானத்தையும் வித்யா கர்வத்தையும் பிரதிபலிக்கின்றன. இரண்டடியில் குறள் எழுதிய ஒரே பாடல மனைவியின் இயல்புகளைப் பிரதிபலிக்கிறது. கவிதையும் இலக்கியமுமாய் வாழ்ந்த சங்க காலம் தமிழின் பொற்காலம். அதில் ஒரு சில புலவர்களின் பாடல்களை ரசித்து மெய் மறக்கலாம். தமிழ் இன்பத்தை அனுபவிக்கலாம்.

சுந்தரக்கவிராயர் என்று ஒரு புலவர், அவர் வாழ்ந்த காலம், வரலாறு அவ்வளவாகத் தெரிய வில்லை. அவரை ஆதரித்தவரைப் பற்றி அவர் கவிதை யில் குறிப்பிடுவதை வைத்து பதினெட்டாம் நூற்றாண் டாக இருக்கலாம் என்று கருதுகிறார்கள். எந்த ஆண்டாக இருந்தால் என்ன? காலம் கடந்தும் தனித்து நிற்கிறதே தமிழ்.

பத்துக்கால், மூன்று தலை, பார்க்கும் கண் ஆறு, முகம்

இத்தரையில் ஆறு, வாய் ஈரிரண்டாம் இத்தனையும்

ஓரிடத்தில் கண்டேன், உகந்தேன், களி கூர்ந்தேன்

பாரிடத்திலே கண்டு பகர். என்று வியந்து பிரமிக்கிறார் கவிராயர்.

உலகத்திற்கு உணவு அளிப்பது விவசாயம். உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர் என்று கூறுகிறோம். அந்த உயிரை எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் தருபவன் விவசாயி. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்று கூறுகிறார் வள்ளுவர். உழுவார் உலகத்தோருக்கு அச்சாணி என்று கூறுகிறார். அந்த விவசாயி நிலம் உழுவதைப் பெருமிதம் பொங்கப் பாராட்டுகிறார் கவிராயர்.

இரண்டு காளைகளை ஏரில் பூட்டி ஓட்டும்போது அவைகளின் எட்டுக் கால், விவசாயியின் இரண்டு கால் என்று பத்துக்கால்கள், இரண்டு காளைகளின் தலைகள், மனிதனின் தலை என்று மூன்று தலை, இரண்டு காளைகளின் கண்கள் நான்கு, மனிதனின் இரண்டு கண்கள் ஆக மொத்தம் ஆறு கண்கள். காளை, மனிதன் முகங்களோடு கொழுமுகம் மூன்றும் சேர்ந்த முகம் ஆறு, காளைகளின் வாய் இரண்டு, மனிதன் நாழிவாய் சேர்ந்து நான்கு வாய் என்று ஒரே இடத்தில் இத்தனையும் பார்த்தேன். இவ்வுலகின் அதிசயம் இது என்று வியக்கிறார்.

உழவின் பெருமையை சொல்லோவியமாக நம் கண் முன் காட்டும் இந்தப் பாடலைப் படிக்கும்போது விவசாயிகளை நினைத்து பெருமிதம் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. புலவர்கள் தாங்கள் அறிந்த வற்றை, திறமையை, புலமையை கவிதைகள் மூலம் காட்டுகிறார்கள்.

எத்தனை அற்புதங்கள் நிறைந்த தமிழ் என்று நினைக்கும் போது தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்ற கவிஞர் வாக்குக்கு ஏற்ப தமிழராகப் பிறந்ததற்கும் தமிழ் மொழியில் இனிமையான பாடல்களைத் தந்த புலவர்களையும் நினைத்து பெருமை கொள்ள வேண்டும்.

---

# இளைஞனே நீ அறிவாய்!

இளைஞனே இளைஞனே
எழுச்சி காண வா வா
சிதைந்து கிடக்கும்
இளைய சமுதாயத்தை
ஒன்றிணைக்க வா வா
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
என்று குரல் கொடுக்க வா வா
வரும் காலம் உன் கைகளில்
உறுதியோடு உழைத்திட வா வா
நஞ்சு முட்கள் நிறைந்து கிடக்கும்
சமுதாயத்தை களை எடுக்க வா வா
அலுவலகம் முதல் அரசியல் வரை
அசிங்கங்கள் நிறைந்து கிடக்கிறது
அவற்றை வெளியேற்றிட வா வா
வளம் நிறைந்த நம் நாடு
வளம் குலைந்து கிடக்குது
மாற்றி அமைந்திட வா வா
அறிவு நிறைந்த முன்னோர்கள்
வாழ்ந்த நம் நாட்டில்
அறிவைத் தேடும் நிலை வந்தது
அறிவை மீட்க நீ வா வா
மாற்றம் வேண்டும் இந்நாள்
மாற வேண்டும் உன்னால்.

வாணியம்பாடி தியாகராஜன்
9926082032



## வழிகள் உண்டோ?

காலைவரும் கதிரொளியைத் தோளில் தாங்கி
கடும்வெயிலி லுழைத்துழைத்து வியர்வை சிந்தி
வேலை செய்தும் கால்வயிற்றுக் கஞ்சி கூட
காணாது வாடுகின்ற கும்பி யோடு
நாளெண்ணிக் கடத்துகின்ற நிலையில் வாழும்
நம்நாட்டின் நலிந்தோரை நினைத்துப் பார்த்து
வேலைக்குக் கூலியாகக் கொடுத்தால் கூட்டி
வீட்டாரும் நிம்மதியாய் வாழ்வார் இங்கே

காசொன்றே பெரிதென்ற எண்ணம் உள்ளோர்
காலமெல்லாம் தவறுசெய்யத் துணிந்து நிற்பார்
மாசுநிறை உள்ளமதை உடலில் தாங்கி
மனச்சாட்சி மறந்திங்கே மகிழ்வார் நாளும்
பாசமென்றால் என்னவிலை? என்றே கேட்கும்
பாவியாக வாழ்ந்திடுவார் இந்தமண்ணில்
நேசமுடன் உழைக்கின்ற ஏழை மக்கள்
நிம்மதியாய் வாழயிங்கே வழிகள் உண்டோ?

யார்க்கு மீந்து வாழ்தலொன்றே சிறப்பைச் சேர்க்கும்
எனவறிந்தும் பிறர்க்குதவும் பண்பு மின்றி
சேர்த்திருக்கும் பணத்தோடு மேலும் கூட்டி
சிறுசேமிப்புபோல் வீட்டில் மூட்டை கட்டி
பார்க்கின்ற வேலையிலே குறைகள் காட்டி
பாதியாகக் கூலிதனைக் குறைக்கப் பார்ப்பார்
பார்விட்டு ஒருநாளில் போகும் போது
பதுக்கி வைத்த பணங்களேதும் வருமா? கூறும்

**கவிஞர். ந. இராமன்.**

## காற்று

கட்டிடங்களே காதலியுங்கள்
பசுமை தேசத்தை முத்தமிட்ட – இவைகள்
இன்று உங்களின் வண்ணச் சுவர்களில்
மோதி உடைவதைக் கண்டு – இவைகளின்
அணைப்பில் தலையசைத்த இலைகள்
இன்று இருந்த தடமின்றி போனதால்
கண்ணாடி சன்னல்களின்
கால்களை அசைத்துச் செல்கின்றன
இயற்கையின் நறுமணத்தை
இழந்த நாசிகள் உறையிடப் பட்டதால்
உறைவிடம் அற்று
வண்டிப் புகைகளில் வாழ்வதைக் கண்டு
காதலியுங்கள்

மகரந்தங்களை பரிமாறிய இவைகள்
இன்று உயிரற்ற உங்களிடம்
வண்ண கறைகளை வாங்கிச் செல்கின்றன
ஆயிரம் கைகள் அசைந்ததால்
வந்த காற்றை மூன்று இறக்கையில்
மூட்டை கட்டியதால் – காதலியுங்கள்
பாகுபாடின்றி பகிரப்பட்ட
இவைகளின் இன்றைய
பரிதாபநிலை கண்டு

## காவிரி

பெண்ணின் பெயர் கொண்டதால்
'கொடுமை' – என்னிலும் நிகழ்கிறது
அணை கட்டி அவசியம் தீர்ந்த பின்
கடலில் கரைக்கின்றனர் – 'எனதுயிரை'
பெண் என்றால் சிறைப்படுத்துவது
என்னைத் தடுப்பது புதிதல்ல
என்றாலும் இதைக் கேட்பவர் யார்?
என்னை மீட்பவர் யார்?

**– உ. அ. சிந்து**



# துப்புரவுத் தொழிலாளர்கள் நிலை?



சென்னை மாநகராட்சியில் துப்புரவு செய்யும் பணியைராம்கிநிறுவனம் செய்து வருகிறது. மாநகராட்சியோடு ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத் தின் அடிப்படையில் இப்பணிநடை பெறுகிறது. மாநகராட்சியிடம் ஒப்பந்தஅடிப்படையில் பணம் பெற்றுக் கொண்டு வேலை செய்யும் இந் நிறுவனம் தனது தொழிலாளர்களை சரியாகப் பராமரிக்கி றார்களா? அவர்களது தேவைகளை பூர்த்தி செய்கி றார்களா? என்றால் இல்லை என்றே தொழிலா ளர்கள்கூறுகிறார்கள்.

ஒரு ஆண்டுக்கு இரண்டு சீருடைகள்தான் தரப்படு வதாகச் சொல்லப்படுகிறது. கழிவுகளை, குப்பைகளை அகற்றுவதற்கு கையுறைகள் கொடுப்பதில்லை. அதன் விளைவாக தொழிலாளர்களுக்கு நோய்கள்ஏற்பட்டு உடல்நலம் கெடுகிறது. தொற்று நோய்கள் விரைவாக இவர்களைப் பிடித்துக் கொள்கிறது. 2015ஆம் ஆண்டு சென்னைக்கு வந்த வெள்ளம் ஏற்படுத்தியசீர்கேட்டை சரிசெய்யவும், குப்பைகூளங்களை அள்ளி சுத்தப்படுத் தவும் சேலத்திலிருந்து வந்த தொழிலாளர்களில் சிலர் இறந்து போனதைமறைத்து விட்டார்கள்என்றும் கூறுகிறார்கள்.

சென்னையில் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு தரப்படுகிற குப்பை வண்டிகள்பழுதடைந்தால் அந்தப் பழுதை நீக்க நிதி தருவதில்லை. தொழிலாளர்களே தங்கள் கையிலிருந்து செலவு செய்ய வேண்டுமாம். துடைப்பம்கூட நீங்களே வாங்கிக் கொள்ளுங்கள்என்று கூறப்படுவதாகவும் சொல்கிறார்கள். மாநகராட்சி கொடுப்பதைஇந்தநிறுவனத்தினர் கொடுப்பதில்லை.

தொழிலாளர்கள்நிரந்தரத் தொழிலாளர்கள் இல்லை. ஒப்பந்தத் தொழிலாளர்கள்தான். பணி நிரந்தரம் என்பதெல்லாம் கிடையாது. செல்வந்தர்கள், அரசியல்வாதிகள் இருக்கும் பகுதிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் சீருடைகள் எண்ணிக்கை, சாதாரணமக்கள் வாழும் பகுதிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை என்கிறார்கள். ஒரு கண்ணில் வெண்ணெய் ஒரு கண்ணில் சுண்ணாம்பு என்ற நிலையில் தொழிலாளர்களையும் பிரித்து வைக்கப்படு வதாகவும் தொழிலாளர்கள்கூறுகிறார்கள்.

துப்புரவுத் தொழில் செய்யும் தொழிலாளர்கள் ஒடுக்கப்பட்டசமூகத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். தோட்டி, எஸ்சி, என்றஇந்தஇரண்டு சமூகத்தினரும்தான் பெருமளவில் இவ்வேலையைச் செய்து நகரத்தை தூய்மைப்படுத்தி வருகின்றனர். அதனால்தானோ என்னவோ இவர்களுக்குத் தரப்பட வேண்டிய நியாயமானபணி உரிமைகள் மறுக்கப்படு கின்றன. இப்பணியில் உயர் சாதியினர் அமர்த்தப் பட்டிருந்தால் இப்படி நடந்து கொள்வார்களா என்ற குமுறலும் தொழிலாளர்களிடையேகாணப்படுகிறது.

இப்பணிகளாவது தொடர்ந்து கிடைக்குமா என்றால் அதற்கும் வேட்டு வைத்து விடுகிறார்கள். இயந்திரமயமாக்குதல் என்றநடைமுறையால் சுடு காட்டில் வேலை செய்தவர்களுக்கும் வேலை

பறிபோய்விட்டது. இப்படி எல்லா நிலைகளிலும் துப்புரவுத் தொழிலாளர்கள்பாதிக்கப்பட்டு வருகிறார்கள்என்பதைசமூகம் உணர்ந்து அவர்களது நலனுக்காகவும் குரல் கொடுக்க வேண்டும்.

**சைதை மணிமாறன்**




# பா.ச.க., அதிகாரத்திற்கு வந்தது எப்படி?

கேம்பிரிட்ஜ் அனாலிட்டிக்கா நிறுவனம் மூலம் பா.ஜ.க.எப்படி பலன் அடைந்தது என்று கண்டுபிடிக் கப்பட்டு இருக்கிறது.

ஏற்கனவே "பா.ஜ.க.விற்கு நாங்கள் உதவினோம்" என்று கேம்பிரிட்ஜ் அனாலிட்டிக்கா நிறுவனத்தின் இந்திய கிளை யான ஓவலேனோ பிசினஸ் இண்டலி ஜென்ஸ் நிறுவனம் ஒப்புக்கொண்டு இருக்கிறது. இந்த முறைகேட்டை பிரபல சேனல் 4 தொலைக் காட்சி தான் கண்டுபிடித்தது. அவர்கள் நடத்திய ஸ்டிங் ஆப்ரேஷன் மூலம் கேம்பிரிட்ஜ் அனாலிட் டிக்கா நிறுவனம் இவர்களுக்கு இந்தியாவில் பா.ஜ.க.தான் மிக முக்கியமான சந்தாதாரர்களாக இருக்கிறார்கள் என்று கூறி இருக்கிறது.

பா.ஜ.க.வின் 4 தேர்தல் வெற்றிக்கு பின்னால் இவர்கள் இருக்கிறார்கள். உத்தர பிரதேச தேர்தல் வெற்றி, நாடாளு மன்றத் தேர்தல் வெற்றி, குஜராத் தேர்தல் வெற்றி, திரிபுரா போன்ற சில சிறிய மாநிலங்களின் தேர்தல் வெற்றி என எல்லாவற்றிற்கும் பின் இவர்கள்தான் இருக்கிறார்கள். இவர்களிடம் பா.ஜ.க.பணம் கொடுத்து பேஸ்புக்கில் அவர் களுக்கு சாதகமான செய்திகளை பரப்ப வைத்துள்ளது. ராகுல் காந்தியை பப்பு என கிண்டல் செய்யும் வழக்கத்தை உருவாக்கியவர்கள் இவர்கள்தான் என்று கூறப் படுகிறது.

ராகுல் காந்தி செய்யும் சிறு சிறு தகவல்களை பெரிதாக்கி, வீடியோவாக வெளியிட்டு, அதை பேஸ் புக்கில் வைரலாக வரச் செய்து, அவர் மீது இருக்கும் மக்களின் நிலைப்பாட்டை மொத்தமாக மாற்றுவது இவர்களின் முதல் பணியாக இருந்துள்ளது.

அதேபோல் இந்தியா முழுக்க மோடி அலையை உருவாக்கியவர்கள் இவர்கள்தான் என்று கூறப்படு கிறது. மோடியை ராட்சகன் போல காட்டி, நிறைய கட்டுரைகளை பேஸ்புக்கில் விளம்பரங்கள் மூலம் பரப்பி இருக்கிறார்கள்.

கடந்த நாடாளுமன்ற தேர்தல் வாசகமான "ஆப் கி பார் மோடி சர்க்காரை" வைரலாக்கியது இவர்கள்தான் என்று கூறப்படுகிறது. இந்தியாவின் ஏதாவது ஒரு விஷயம் வைரல் ஆகும் போது, அதை மறைக்க காஷ்மீர் பிரச்சனை, மாட்டுக்கறி என்று வேறு விஷயங்களை வைரலாகி மக்களை திசை திருப்புவது இவர்கள்தான் என்று கூறப்படுகிறது. குஜராத் மாடல் என்ற வலுவான பிரச்சாரத்தை இவர்கள்தான் உருவாக்கினார்கள்.

மோடி குறித்து 6 வருடங்களுக்கு முன் கூகுளில் சர்ச் செய்தால், ரயில் எரிப்பு சம்பவம் மட்டுமே வரும். ஆனால் அதை மாற்றி குஜராத் மாடல் என்பதை போலியாக வைரலாக்கி அதை கூகுளில் முதல் முடிவாக வரவைத்து இருக்கிறார்கள் ஓவலேனோ பிசினஸ் இண்டலிஜென்ஸ் நிறுவனத்தை சேர்ந்த வர்கள்.

இந்த நிறுவனம் உத்தர பிரதேசத் தேர்தலிலும் அதிக பங்கு வகித்து இருக்கிறது. பாபர் மசூதி இடிப்பு என்பதை மாற்றி, ராமர் கோவில் கட்டுவோம் என்பதை முன்னிலை படுத்தியது இவர்கள்தான், அங்கு ராமர் கோவில் இருந்தது என்று கூறும் கட்டுரை களை, உத்தர பிரதேச பேஸ்புக் பயனாளர்களின் பக்கங்களில் விளம்பரங்கள் மூலம் ஹிந்தி யில் வரவைத்துள்ளார்கள். இது அம்மாநில தேர்தல் முடிவை மாற்றியுள்ளது.

இவர்களின் அடுத்த திட்டம் 2019 தேர்தல் என்று கூறப்படுகிறது. இதுவரை இவர்கள் தேர்தல் முடிவு களை 90 சதவிகிதம் மாற்றியுள்ளதாக அவர்கள் இணையத்தில் மார் தட்டி இருக்கிறார்கள். 2019 தேர்தலுக்காக கடந்த 5 வருட ஆட்சியின் சாதகங்களை மட்டும் பேஸ்புக்கில் கொண்டு சேர்க்கும்படி இந்த நிறுவனத்திற்கு டாஸ்க் கொடுக்கப்பட் டுள்ளது. ●

# ஈழத்தின் மூத்த கவிஞர் நாவண்ணன்



ஈழத்தின் மூத்த கவிஞர் நாவண்ணன் 15.04.2006 அன்று மரண மடைந்தார். அவரின் 12ஆம் ஆண்டு நினைவு நாள் கடந்த 15.04.2018 அன்று கடைபிடிக்கப்பட்டது.

கலைஞர் திரு. நாவண்ணன் அவர் களுக்கு மாமனிதர் விருது வழங்கி தமிழீ ழத் தேசியத் தலைவர் அவர்கள் கௌர வித்தார்கள். இவரின் தாய் மண் பற்றின் சான்றுகள் தமிழீழ மண்ணிலும் இன்றும் தமிழர் மனங்களிலும் என்றும் நிலைத்து நிற்கின்றன. சில கவிஞர்கள் வெறும் ஏட்டுக் கவிஞர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் வாழ்வு என வருகை யில் தாமும் தமது குடும்பமும் பாது காப்பாக இருந்து கொண்டு மற்றவர்கள் போராட வேண்டும் என நினைப்பார்கள்.

போராட்டத்தின் பதிவுகளை தனது எழுத்து, பேச்சு, ஓவியம், சிற்பம் போன்றவற்றால் வெளிப்படுத்தியவர். கவிஞர் நாவண்ணன் அவர்கள், தமிழன் சிந்திய இரத்தம், கரும்புலி காவியம், இனிமைத் தமிழ் எமது ஈரமுது உள்ளிட்ட சிறப்பு நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கினார். அரங்காற்று கையிலும் தனக்கென தனியிடத்தைப் பிடித்து கொண்டவர். நாவண்ணனால் தயாரிக்கப்பட்ட வலியும் பழியும் என்ற பிரமாண்டமான நாடகம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. புலிகள் தயாரித்த கரும்புலிகள் காவியத்தை நூலாக வெளியிட்ட அதே வேளை பல்வேறு நூல்களையும் வெளியிட்டார். அதே போல் ஓவியம் சிற்பம் ஆகியவற்றை வெளிப்படுத்திய அவர், இறுதிக்காலத்தில் ஒளிக்கலையிலும் செயற்பட்டார். தமிழீழ தேசியத்தலைவர் அவர்களால் இரண்டு தடவைகள் தங்கப்பதக்கம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். 1998ஆம் ஆண்டு புலிகளின் குரலில் சிறப்பாக செயற்பட்டமைக் காகவும் அதன் பின்னர் கவியம் நூல் உருவாக்கம் கலை இலக்கியம் போன்ற செயற்பாடுகளுக்காக இரண்டாவது தடவையும் கௌரவிக்கப்பட்டார். 1948ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் பிறந்த இவர் தனது இளமை வாழ்க்கையை யாழ் பகுதியிலேயே தொடங்கினார்.

இம்மண்ணில் ஆயுதப் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்தே இவரும் தன் பேனா முனையால் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் கருத்துக்களை எழுதத் தொடங்கினார். ஒரு கவிஞனாக உருவெடுத்த நாவண்ணன் தமிழ் மக்களுக்குள் எழுந்த விடுதலையின் சுவாலையை எரிய வைக்க கவிதை வடிவிலும் பாடல் வடிவிலும் நகைச்சுவை வடிவங்களிலும் தன் வரிகளை எழுதினார்.

எதிரியின் யாழ் மீதான ஆக்கிரமிப்பால் வன்னி வந்த இவர், வன்னியில் எதிரியின் படையை விரட்டி புலிகளின் படையணிகள் புது வரலாறு படைப்பதற்கு தோளோடு தோள் கொடுத்தவர். போராட்டப் பாதை



யில் அவரின் இளமைக்காலத்திலிருந்தே இறுதிக்காலம் வரை ஓயாது இயங்கினார். எமது போராளிகள் மக்கள் செய்த தியாகங்களை அர்ப்பணிப்புக்களை சாதனை களை அவர்கள் சந்தித்த இழப்புக்களை பதிவுகளுள் செலுத்த வேண்டுமென்பதில் துடியாய்த் துடித்தவர். அதற்காக ஊர், ஊராகத் திரிந்து இரவு பகலாக அலைந்து குடிசைகளிலும் கடற்கரைகளிலும் படுத் துறங்கி அவர்களின் வாழ்வை தன்வாழ்வாக்கி உணர்வு களை வரைந்தார்.

அத்தோடு, நெருப்பாற்றில் நீச்சலிடும் விடுதலைப் போரின் வீச்சுமிக்க பக்கங்களை, வெற்றிகளை எழுத்துருவில் மட்டுமல்லாது ஒலிநாடாக்களிலும் இசைத்தட்டுகளிலும் பதிவு செய்வதற்காகவும் துடிப்பார்.

ஓர் கவிஞனாக மட்டுமல்லாது ஓர் ஓவியானகவும் சிற்பியாகவும் நாவலாசிரியராகவும் தன் உணர்வுகளை, பதிவுகளை பல்வேறு வடிவங்களிலும் ஆவணமாக்கி னார். எம் தேசத்தின் வாழ்வோடு ஒன்றிணைந்திருந்த இவரது குடும்பத்தில் ஐந்து பெண் பிள்ளைகளிற்கு ஒரேயொரு ஆண் மகனாக இருந்த சூசைநாயகம் கிங்சிலி உதயம் லெப் கவியழகன் என்பவர் இத்தேசத் தின் பயணத்தில் இணைந்து இறுதிவரை களமாடி மாவீரரானார். அதனாலும் மனம் தளராது வீர மறவ னைப் பெற்றெடுத்தேன். .அவனை வீர புத்திரனாய் மண்ணிற்குள் விதைத்தேன் என்று தன் உயிர்ப் பிரிவின் உணர்வை இலக்கியமாக படைத்தார்.

இவரின் முதுமைக்காலத்தில் புலிகளின்குரல் வானொலியிலும். தமிழீழத் தேசியத் தொலைக் காட்சியிலும் தன் ஆற்றலினூடாக பல்வேறு நிகழ்வு களை உலகுக்கும் உணர்த்தினார். இவரின் ஆற்றலிற் காக எம் தேசியத் தலைவர் அவர்களிடம் இருமுறை விருதுகள் பெற்றார். இறுதியில் இயற்கையின் சீற்றத்தால் அழிந்துபோன எம் உறவுகளை நினைந்து ருகி ஆழிப்பேரலையின் சுவடுகள் என்னும் அரிய நூல் ஒன்றையும் எழுதினார். இவ்வாறு ஒவ்வொரு நிகழ்வுகளையும் பதிவிற்குள் கொண்டுவரத் துடிக்கும் இவரின் இழப்பு பேரிழப்பாகும்.

காலத்தின் சுழற்சியோடு தன் வாழ்க்கையை ஒன்றிணைத்து என்றுமே எப்போதுமே தன் படைப்பின் மூலம் நினைவுகளைப் புரட்டிப்பார்க்க விட்டுச்சென்ற ஓர் உன்னத மனிதன் கவிஞர் நாவண்ணன். அப்படிப்பட்டவர் மத்தியில் தான் மட்டுமன்றி தனது அருந்தவ புதல்வனையும் மண்ணிற்கே ஈகம் செய்தவர் கவிஞர் நாவண்ணன் அவர்கள். பல மாவீரர் பாடல்களை எழுதி எமக்காக உணர்வு ஏந்தித் தந்தவர் கவிஞர் மாமனிதர் நாவண்ணன் அவர்களின் புதல்வன் லெப். கவியழகன் (சூசைநாயகம் கிங்சிலி உதயம்) 16051997 அன்று வவுனியா நெடுங்கேணியில் ஜெயசிக்குறு நடவடிக் கைக்கு எதிரான சமரில் வீரச்சாவடைந்தார்.

**தமிழீழன்**

கவிஞர் நாவண்ணன் அவர்களது முதலாம் ஆண்டு நினைவு நாளின்போது தமிழினத் தலைவர். மேதகு. வே. பிரபாகரன் ஆற்றிய உரை:

சுயநலன் கருதாது, நேர்மையுடனும் நெஞ்சுறுதி யுடனும் எமது தேச சுதந்திரப்போராட்டத்தின் அரும்பணி ஆற்றிய கலைஞர் நாவண்ணன் அவர் களை நாம் இழந்து இன்றுடன் ஓராண்டு நிறை வடைகிறது.

தமிழினம் பெருமைப்படும்படியாக கலையுலகில் பெரும் சாதனைகளைப் புரிந்த கலைமாமணியை அவரது முதலாவது நினைவாண்டில் இன்று நான் பெருமையோடு நினைவுகூருகிறேன்.

இவர் ஒரு சிறந்த கலைப்படைப்பாளி, இவரிடம் கலைஞர்களுக்கே உரித்தான உள்ளம் இருந்தது. வற்றாத கலையுணர்வு இருந்தது. கட்டுங்கடங்காத கற்பனை வளம் இருந்தது. கலைக்கு அணிகின்ற நிறைந்த அறிவு இருந்தது. தமிழ் மீது அளவுகடந்த பற்றும் பாசமும் இருந்தது. தனது மண்ணின் விடுதலைக்கு பங்காற்ற வேண்டும் என்ற உயரிய குறிக்கோள் இருந்தது. சுயமான ஆளுமை இருந்தது. இவை எல்லாம் ஒன்று கலந்த மனிதம் இருந்தது. இந்த அழகான மனித மாண்பே அனைவரையும் அவரை நோக்கிக் கவர்ந்து கொண்டது.

சுதந்திரப் போராட்டங்களுக்கு உந்து சக்தியாக, ஊக்க சக்தியாக அமைவது தேசப்பற்று. இரக்கம், தேசப் பற்று இவரிடம் நிறைந்திருந்தது. அவரது ஆழ்மனதில் ஆழமாக வேரோடி நின்றது. ஆட் கொண்டு நின்றது. விடுதலை வேட்கையாக அவரிடம் வெளிப்பட்டு நின்றது. எமது சுதந்திர இயக்கம் முன்னெடுத்து வரும் விடுதலைப் போராட்டத்திலே ஒரு இலட்சியப் பிடியை அவரிடம் காண முடிந்தது. பொதுவாகவே இலட்சியத்தில் பிடிப்பு ஏற்பட்டுவிட்டால், துன்பங்கள் தெரிவதில்லை. வலிகள் தெரிவதில்லை. அவரும் போராட்ட வாழ்வின் பெரும் துயர்களையும் சுமை களையும் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, முதுமையான வாழ் வின் உடல் உபாதைகளையும் சகித்துக்கொண்டு விடுதலைப் பாதையிலே செயற்பட்டார்.

அவர் தமிழீழ மண் தந்த ஒரு சிறந்த கவிஞர், சிறந்த ஓவியர், சிறந்த சிற்பவல்லுநர், சிறந்த நாடக நெறி யாள்கையாளர். அவர் கலைகளுக்காகவே வாழ்ந்தார். கலைகள் பற்றியே சதா சிந்தித்தார். பல கலை வடிவங் களைக் கண்டறிந்து அவற்றோடு புதிய நுட்பங்களைப் புகுத்தி, காலத்திற்கேற்ப, வரலாற்று ஓட்டத்திற்கு ஏற்ப கலைப்படைப்புகளைச் செய்தார். அவரைப்போலவே அவரது கலைப்படைப்புகள் அழகும் ஆழமும் வாய்ந்தவை. அனைவரையும் கவர்ந்திழுக்கும் சக்தி வாய்ந்தவை. அத்தோடு அவர் தனது கலைப் படைப் புக்கள் ஊடாக மக்களிடையே போராட்ட விழிப் புணர்வையும் ஒடுக்கு முறைக்கு எதிரான கொதிப் புணர்வையும் தூண்டிவிட்டார். சிங்கள அரசு எமது தாயக மண்ணிலே நிகழ்த்திய கொடுமைகளை யும் கொடூரங்களையும் அதன் ஆழ அகலங்களில் கால வரிசைப்படி பதிவுசெய்தார். போராட்ட வாழ்வில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் எண்ணற்ற பிரச்சி னைகளையும் நெருக்கடிகளையும் பல்வேறு கோணங் களில் படம் பிடித்தார். தனது கலைப்படைப்பின் உச்சமாக கரும்புலிகளது தோற்றத்தையும் வளர்ச்சி யையும் எழுச்சியடையும் தனது அழகுத்தமிழிலே கரும்புலிக் காவியமாக வடித்து நூல் வெளியிட்டார். அன்னார் ஆற்றிய பெரும் பணி என்றுமே போற்று தற்குரியது.

கலைஞர் நாவண்ணன் அவர்களின் இனப் பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது விடுதலைப் பணியைக் கௌரவிக்கும் முகமாக “மாமனிதர்“ என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன் சத்திய இலட்சியத்திற்காக வாழ்ந்த, உயர்ந்த மனிதர்களின் சாவு என்றும் மறக்கப்படுவதில்லை. இவரைப் போன்றவர்கள் சரித்திர நாயகர்களாக எமது தேசத்தின் ஆன்மாவில் என்றும் வாழ்வார்கள்.



# தொலைந்த மொபைலை ஒரே நிமிடத்தில் நாமே கண்டுபிடிக்கலாம்...

செல்போன் தவறவிட்டால் பதறாமல் இருந்த இடத்திலிருந்தே கண்டுபிடித்து விடலாம். அது மட்டும் இல்லாமல், நம்முடைய தனி மனித ரகசியத்தைப் பற்றி கவலை கொண்டால், அல்லது மிக முக்கிய செய்திகள் மற்றும் கோப்புகளை யாரேனும் திருட முடியும் என்று அச்சப்பட்டாலோ இனி அந்த கவலையை விட்டு விடுங்கள்.

அந்த போனில் உள்ள முக்கிய தகவல்களை லாக் செய்ய முடியும். தவறவிட்ட, திருடப்பட்ட செல்போனில் உள்ள முக்கியத் தகவல்களை அழிக்க முடியும். ஆச்சரியமாக இருக்கிறதா, இது உண்மை.

இந்த வசதிகளை எப்படி பயன்படுத்துவது என்று பார்க்கலாம்.

find my device மூலம் இதை எளிதான செய்ய முடியும். முதலில் கூகுள் சர்ச்சில் android.com/find என டைப் செய்யுங்கள். பிறகு உங்கள் கூகுள் அக்கவுண்டை log in செய்யுங்கள். உங்களின் email and password கொடுத்த பின்பு லாக் இன் ஆகும்.

அப்போது ஸ்க்ரீனின் இடது புறம் நாம் தவறவிட்ட செல்போன் மாடல் எண் மற்றும் அதற்கு கீழே play sound,lock ,erase என்ற 3 தகவல்கள் இருக்கும். ஸ்கிரீன் வலது புறம் தற்போது அந்த செல்போன் எந்த இடத்தில் உபயோகத்தில் உள்ளது என்பது தெரியவரும். play sound கிளிக் செல்தால் செல்போன் 5 நிமிடம் ஒலிக்கும். lock ஆப்சனை கிளிக் செய்தால் செல்போன் லாக் ஆகி விடும். erase ஆப்சனை கிளிக் செல்தால் செல்போனில் உள்ள தகவல் அனைத்தும் அழிந்து விடும்.

இந்த அற்புதமான செய்தியை நாம் ஒவ்வொரு வரும் தெரிந்து வைத்துக்கொண்டால், இக்கட்டான நேரங்களில் நமக்குப் பயன்படும்.

**தாஸ்.**

இந்தியாவில் உள்ள நிலைமையைக் கண்டு மிகவும் வெட்கப்படுகிறோம், வேதனைப்படுகிறோம், கடுங் கோபப்படுகிறோம் என்று ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., அதிகாரிகள் பிரதமர் நரேந்திரமோடிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

அந்தக் கடிதத்தின் சில பகுதிகள் வருமாறு:

1. மக்களால் அளிக்கப்பட்ட அடிப்படைப் பொறுப்புகளை நிறைவேற்ற அரசாங்கம் தவறிவிட்டது என்பதை ய கத்துவா மற்றும் உன்னாவோ பயங்கர நிகழ்வுகள் காட்டுகின்றன.

2. இந்துக்கள் என்ற பெயரால் ஒருவர் மற்றொரு வரிடம் மிகக் கொடூரமான முறையில் நடந்துகொண் டிருப்பதானது, நாம் மனிதர்களாக இருப்பதற்கே அருகதையற்றவர்கள் என்று காட்டியிருக்கிறது.

3. பிரதமர் அவர்களே, இக்கடிதத்தை நாங்கள் உங்களுக்கு எழுதுவதற்குக் காரணம், இச்செயல்களைக் கண்டு நாங்கள் வெட்கித் தலைகுனிகிறோம் வேதனைப்படுகிறோம், புலம்புகிறோம் என்று உங்களுக்குத் தெரிவிப்பதற்காக மட்டுமல்ல, இச்செயல் களைக் கண்டு கடுங்கோபம் கொண்டிருக்கிறோம் என்று காட்டுவதற்காகவும்தான் எழுதி இருக்கிறோம். மக்களிடையே மத ரீதியாக வெறுப்பை உமிழும் உங்கள் கட்சி மற்றும் அதன் கணக்கிலடங்கா பிரிவுகளின் நிகழ்ச்சி நிரல்கள் கண்டு கடுங்கோபம் கொண்டிருக்கிறோம். இவை நம் நாட்டின் அரசியலில், நம் சமூக மற்றும் கலாச்சாரத்தில், ஏன் நாளும் நடைபெறும் நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் மோசமான முறையில் மெல்ல மெல்ல பிற மதத்தினர் மத்தியில் வெறுப்பை உமிழும் காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்றன. அத்தகைய உங்கள் நிகழ்ச்சிநிரல் தான் கத்துவா மற்றும் உன்னாவோ நிகழ்வுகளுக்கு சமூக அங்கீகாரத்தையும், சட்டபூர்வ அங்கீகாரத்தையும் அளித்திருக்கின்றன".

4. ஜம்முவில் உள்ள கத்துவாவில் சங் பரிவாரத்தால் நாளும் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்துக்கள் அல்லாதவர்களுக்கு எதிரான பிரச்சாரம் மற்றும் வன்தாக்குதல் கலாச்சார நடவடிக்கைகளால் வெளியேற்றப்பட்டுள்ள மதவெறியர்களுக்குத் தங்களு டைய வக்கிரத்தனமான நிகழ்ச்சி நிரலை அரங்கேற்று வதற்குத் துணிவைத் தந்துள்ளது. தாங்கள் மேற்கொள் ளவிருக்கும் செயலானது தங்கள் கட்சியில் உள்ள

# இந்தியாவில் உள்ள நிலைமையைக் கண்டு மிகவும் வெட்கப்படுகிறோம்,



அதிகாரம் படைத்தவர்கள் சரி என்று அங்கீகரிப் பார்கள் என்பதும் அதன்மூலமாக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயான இடைவெளியை அதிகரித்திட முடியும் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

5. உன்னாவோ நிலைமை என்ன? ஆட்சியாளர்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தது மட்டுமல்ல, மிகவும் கண்டிக்கத்தக்கதுமாகும். வன்புணர்வுக் குற்றங்களைச் செய்திட்ட கயவர்களைக் கைது செய்வ தற்குப் பதிலாக, வன்புணர்வுக்கு ஆளானவரை யும் அவர்தம் குடும்பத்தாரையுமே மாநில அரசாங்கம் வேட்டையாடியது என்பது எந்த அளவிற்கு வக்கிரத் தனத்துடன் அந்த அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டி ருந்தது என்பதையே காட்டுகிறது. உயர்நீதிமன்றம் கட்டளையிட்ட பின்னர்தான் உத்தரப்பிரதேச அரசாங்கம் கடைசியில் செயல்படத்தொடங்கியது என்பது எந்த அளவிறகு அது உயர்நீதிமன்றத்தின் கட்டளையை அரை மனதுடனும் கபடத்துடனும் மேற்கொண்டது என்பதைக் காட்டுகிறது.

6. பிரதமர் அவர்களே, இரண்டு வழக்குகளிலும் குற்றமிழைத்துள்ள கயவர்கள், அதிகாரத்தில் உள்ள உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். கட்சிக்குள் எல்லோருக்கும் மேலானவராக நீங்கள் இருப்பதாலும், கட்சியின் மீதான அனைத்து அதிகாரங்களும் உங்களுக்கும் உங்கள் கட்சித் தலைவருக்கும் இருப்ப தாலும், இத்தகைய கொடூரமான நிகழ்வுகளுக்கும் நீங்கள்தான் பொறுப்பேற்க வேண்டியவராவீர்கள். எனினும் நீங்கள், அவ்வாறு பொறுப்பேற்பதற்குப் பதிலாக, அவற்றைச் சரி செய்வதற்குப் பதிலாக, நேற்றுவரை, நீங்கள் இத்தகைய இழிசெயல்கள் குறித்து எதுவுமே கூறாது மவுனமாக இருந்தீர்கள். இந்தியா விலும் சர்வதேச அளவிலும் மக்கள் கொதித் தெழுந்த பின்னர் இனியும் இந்த இழிசெயல்கள் குறித்து கண்டும் காணாதது போல் இருந்துவிட முடியாது என்று நன்கு தெரிந்த பின்னர்தான் நீங்கள் உங்கள் மவுனத்தைக் கலைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

7. அப்போதும்கூட, இந்த செயல்களைக் கண்டிப் பதாகவும், வெட்கப்படுவதாகவும், தெரிவித் துள்ள அதே சமயத்தில், இச் செயலுக்குப்பின்னே மறைந் துள்ள மதவெறிக் குணத்தைக் கண்டிக்க வில்லை. அதேபோன்று, இத்தகைய ஒரு பிரிவினருக்கு எதிராக வெறுப்பை உமிழும் சமூக, அரசியல் மற்றும் நிர்வாக நிலைமைகளில் மாற்றம் கொண்டு வருவோம் என்றும் கூற முன்வரவில்லை. காலதாமதமாக இவ்வாறு கூறும் ஆட்சேபணைகளையும் உறுதிமொழி களையும் நாங்கள் நிறையவே கேட்டுவிட்டோம்".

பிரதமர் அவர்களே, உன்னாவோ மற்றும் கத்துவா வில் பாதிப்புக்கு உள்ளானவர்களின் குடும்பத்தாரிடம் சென்று நம் அனைவரின் சார்பாகவும் மன்னிப்புக் கோருங்கள்.

கத்துவா வழக்கில் குற்றம்புரிந்த கயவர்கள் மீதான வழக்கை விரைவு நீதிமன்றம் அமைத்து விசாரணை மேற்கொள்ளுங்கள். உன்னாவோ வழக்கில் மேலும் காலதாமதம் செய்யாது, சிறப்புப் புலனாய்வுக் குழு வழிகாட்டுதலின் கீழ் நீதிமன்றத்தை அமைத்திடுங்கள்.

சமூகத்தில் ஒரு பிரிவினர்மீது வெறுப்பை உமிழும் குற்றத்தால் பாதிப்புக்கு உள்ளான அப்பாவிக் குழந்தைகளின் நினைவாக, முஸ்லீம்களுக்கும், தலித்து களுக்கும், மற்றும் இதர சிறுபான்மை இனத்தவருக்கும் அவர்களுடைய பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் சிறப்புப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற உறுதி மொழியைப் புதுப்பித்திடுங்கள். அப்போதுதான், அவர்கள் தங்கள் வாழ்வு குறித்தும், சுதந்திரம் குறித்தும், ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர் களின் முழு உதவி யுடன் தங்கள் மீது ஏவப்படும் அச்சுறுத்தல்கள் குறித்தும் அஞ்சாது வாழ இயலும்.

வெறுப்பை உமிழும் குற்றங்களைப் புரிந்திட் டவர்கள் மற்றும் வெறுப்பை உமிழும் பேச்சுக்களை நிகழ்த்துபவர்கள், அரசாங்கத்தின் கீழ் செயல்படும் எவராக இருந்தாலும் அவர்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்திடுங்கள்.

வெறுப்புக் குற்றங்கள் எதிர்காலத்தில், சமூக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் தொடராது தடுப்பதற்கு வகைசெய்யும் விதத்தில், வழிவகை காணும் விதத்தில், சர்வ கட்சி கூட்டத்தைக் கூட்டுங்கள்.

இவ்வாறு அவர்கள் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கோரியுள்ளார்கள்.

(நன்றி: **ஸ்குரோல்,** இன் இணைய இதழ்)

பொது நலன் கருதி
வெளியிடுதல்
தமிழக விடுதலைப் புலிகள்.

## ஹெச். ராஜாவின் சகோதரர் "சஸ்பெண்ட்"

**கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துக் கழக மேம்பாட்டு வளர்ச்சி நிதி நிறுவன நிர்வாக இயக்குநராக சென்னையில் பணியாற்றி வந்தவர் ஹெச். சுந்தர் (58) இவர் மார்ச் 31-ம் தேதி ஓய்வு பெற வேண்டும்.**

**கடந்த 2006 முதல் 2011ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் போக்குவரத்துக் கழகத்தில் முறைகேடு நிகழ்ந்ததாகக் கூறி 17 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கில் சுந்தர் பெயரும் இடம்பெற்றுள்ளது,. இந்த வழக்குத் தற்போது நிலுவையில் உள்ளது. எனவே, கத்தரை ஓய்வு பெற அனுமதிக்காமல், அவரை தமிழக அரசின் போக்கு வரத்து துறைச்செயலர் சந்தரகாந்த் காம்ப்ளே பணியிடை நீக்கம் செய்து மார்ச் 31ஆம் தேதி உத்தரவிட்டார். இதனால் சுந்தருக்கு பணி ஓய்வுக்கு பிறகு வழங்க வேண்டிய அனைத்து பலன்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. பணியிடை நீக்கம் செய்யப்பட்ட சுந்தர் பா.ஜ.க. தேசியச் செயலாளர் ஹெச். ராஜாவின் சகோதரர் என்பது குறிப்பிடத் தக்கது.**

# ராணுவத்தளவாட உற்பத்திக் கேந்திரங்கள்

கடந்த 2017ஆம் ஆண்டிற்கான இந்திய ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டில் ராணுவத் தளவாட உற்பத்திக் கேந்திரங்கள் அமைக்கப்படும் என்று இந்திய ஒன்றிய நிதியமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தமிழ்நாட்டில் போர்க்கப்பல் கட்டும் தளம் அமைக்கப்படும் என்று அறிவித் துள்ளார். மேலும் பன்னாட்டு நிறுவனங்கள் பங்கேற்கும் ராணுவத்தளவாட கண்காட்சியை பிரதமர் மோடி துவங்கி வைத்துள்ளார். இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதமர், உலக நாடுகளுக்கு ராணுவத் தளவாடங்களை ஏற்றுமதி செய்யுமளவிற்கு இந்தியா முன்னேறி இருப்பதாகவும் இதற்காக தமிழ்நாட்டிலும்

உத்தரப் பிரதேசத்திலும் ராணுவத்தளவாட உற்பத்திக் கேந்திரங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார். இதைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் பொருளாதார வளம் மேம்படுத்தப்படும். வேலை வாய்ப்புகள் உருவாகும் என்பது போன்ற கருத்துகளை பாரதிய ஜனதாக் கட்சியினர் ஊடகங்கள் மூலமாக பரப்பி வருகின்றனர்.

இந்த ராணுவத்தளவாட உற்பத்திக் கேந்திரங்கள் உண்மையிலேயே தமிழ்நாட்டுக்கு நன்மை பயக்குமா என்று சிந்தித்தால், அச்சம் ஏற்படுத்தக்கூடிய பல அம்சங்களே நமக்குத் தோன்றுகின்றன.

இந்தக் கேந்திரத்தில் அமையும் தொழிற்கூடங் களுக்கு, நியூட்ரினோ திட்டத்திற்கு வழங்கப்பட்டது போல தேசமுக்கியத்துவம் வாய்ந்த திட்டம் என்றுகூறி சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிமுறைகளிலிருந்து முழுமையான விதிவிலக்கு அளிக்கப்படும். இதைத் தொடர்ந்து மக்களுக்கு உரிமையான தண்ணீர் உள்ளிட்ட அனைத்து இயற்கை வளங்களும் இந்த நிறுவனங்களுக்கு எவ்விதமான கட்டுப்பாடும் இல்லாமல் வழங்கப்படும். அதேபோல இந்த தொழிற்கூடங்கள் வெளியேற்றும் கழிவுகளும் எவ்வித மான முறையான கட்டுப்பாடும் இல்லாமல் இந்நாட்டு நிலம், நீர், காற்று ஆகிய அனைத்தையும் மாசுபடுத்த சட்டபூர்வமான உரிமை வழங்கப்படும்.

இதனால் பாதிக்கப்படும் மக்களுக்குத் தேவையான சட்டபூர்வமான பாதுகாப்போ, நிவாரணங்களோ, இருக்காது. இந்த ராணுவத்தளவாட உற்பத்தித் தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் சூழல்சீர்கேடுகள் கடும் பிரச்சினைகளை ஏற்படுத்தினாலும்கூட அவற்றின் உரிமையாளர்கள் தண்டிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் வெளிநாட்டுக்காரர்களாக இருந்தால் பாதுகாப்பாக விமானம் ஏற்றி அவர்களுடைய சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்கப் படுவார்கள்.

இந்த ராணுவத்தளவாட உற்பத்தி கேந்திரங் களுக்கும், சிறப்புப் பொருளாதார மண்டலங்களைப் போலவோ அல்லது அதைவிட அதிகமான



சலுகைகளோ வழங்கப்படும். இந்த தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தேவையான பணியாளர் பாதுகாப்புச் சட்டங்கள் ரத்து செய்யப்படும். இந்த ராணுவத் தளவாட உற்பத்தி தொழிற்சாலைகள் குறித்த விவரங்கள் மக்களுக்கோ, ஊடகங்களுக்கோ தெரிவிக்காமல் மறைக்கும் நிலை ஏற்படுத்தப்படும்.

இந்த ராணுவத்தளவாட உற்பத்திக் கேந்திரங்கள் அமையும் இடங்கள் அனைத்தும் உயர்பாதுகாப்பு மண்டலங்களாக அறிவிக்கப்படும். மத்திய தொழிற்பாதுகாப்புப்படையின் கட்டுப்பாட்டில் இந்தப் பிரதேசம் முழுமையாக ஒப்படைக்கப்படும். இப்பகுதியில் பொதுமக்கள் நடமாடுவதற்கு தடை விதிக்கப்படும். கால்நடைகள் உள்ளிட்டவைகூட அப்பகுதியில் நடமாடுவது தடை செய்யப்படும். இத்தடையை மீறி அப்பகுதியில் நுழையும் கால்நடைகள் பறிமுதல் செய்யப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களக்கு தண்டனை வழங்கப்படும் நிலை ஏற்படும்.

இன்றைய இந்திய பன்னாட்டு அரசியல் சூழலில் போர்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்று உறுதி கூறிட முடியாது. அவ்வாறு போர்களுக்கு வாய்ப்பு இல்லாத நிலை இருந்தால் ராணுவத்தளவாட உற்பத்திக் கேந்திரங்களுக்கு அவசியம் இருக்காது. இந்நிலையில் உலகின் எந்த நாட்டிலாவது போர் ஏற்பட்டால், அந்த நாட்டிற்கு ராணுவத்தளவாடங்களை ஏற்றுமதி செய்யும் இந்தியா மீதும் தாக்குதல் நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. மேலும் ராணுவத்தளவாட உற்பத்திக் கேந்திரங்களும், அணுஉலைகளும் நிறைந்திருக்கிற தமிழ்நாட்டின் மீது எவ்விதமான போர் நடவடிக்கைகளும் இருக்காது என்ற உறுதிகூற முடியுமா? இந்தியாவின் வடக்கே இருக்கும் பாகிஸ்தானும், தெற்கே இருக்கும் இலங்கையும் எப்போதும் அமைதியாக இருக்கும் என்று சொல்லமுடியாது. ஏனெனில் இந்த இருநாடுகளுமே இந்தியாவைவிட சீனாவை நட் புநாடுகளாகக் கொண்டுள்ளன. இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகம் முற்றிலுமாக சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது நமது பாதுகாப்பை கேள்விக்கு உட்படுத்தும் அம்சமாகும். இந்நிலையில் எங்கு போர் மேகம் உருவானாலும் அதனால் பெய்யப்போகும் “அமில மழை“ ராணுவத்தளவாட உற்பத்திக் கேந்திரமாக இருக்கும் தமிழ்நாடாக இருப்பதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன.

ராணுவத்தளவாட உற்பத்தித் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களும், தரகர்களும், அரசியல்வாதிகளும் லாபம் ஈட்டுவதற்காக தமிழ்நாட்டு மக்களின் பாதுகாப்பை கேள்விக்கு உட்படுத்த வேண்டுமா?

இதையெல்லாம் விட முக்கியமான அம்சம் ஒன்று உள்ளது. இந்தியாவின் மிகப்பெரிய நிறுவனமான ரிலையன்ஸ், ராணுவத்தளவாடம் மற்றும் போர்க்கப்பல், ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்காக சில நிறுவனங்களை உருவாக்கியுள்ளது. பிரான்ஸ் நாட்டிடமிருந்து இந்தியா வாங்கிய ரஃபேல் விமானங்கள் குறித்த சர்ச்சை உங்களுக்கு தெரிந்திருக்கும். இதற்கான ஒப்பந்தத்தின் படி இந்த ரஃபேல் விமானங்களுக்கான உதிரிபாகங்களில் குறிப்பிட்ட சதவீதத்தை இந்தியாவில் தயாரிக்க வேண்டும் மற்றும் அந்த தொழில்நுட்பத்தை பரிமாற்றம் செய்ய வேண்டும். இந்தியா சார்பில் ரஃபேல் விமானத்தின் தயாரிப்புக்கான இந்த உரிமையை பெற்றிருப்பது ரிலையன்ஸ் நிறுவனம். இவ்வாறு உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் லாபநோக்கிற்காக தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரங்களும், உயிர்ப்பாதுகாப்பும் பணயமாக வைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரங்களைத் திட்டமிட்டு அழித்து மோடி தலைமையிலான ஒன்றிய அரசு, தமிழ்நாட்டை ஒரு முழுமையான ராணுவத் தளவாட உற்பத்திக் கேந்திரமாக மாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் இதன் அரசியலை உணர்ந்து இதற்கு உரிய எதிர்வினையாற்ற வேண்டியது தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் சமூக இயக்கங்கள், மக்கள் உள்ளிட்ட அனைவரது கடமையாகும். உண்மையான நாட்டின் வளர்ச்சி ராணுவத்தின் வளர்ச்சியில் இல்லை. அந்த மக்களின் அடிப்படை ஆதாரங்கள் பாதுகாக்கப்படுவது மட்டுமே நீடித்துநிலைக்கக்கூடிய வளர்ச்சியாகும்.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்“ என்று சர்வதேசிய சமத்துவம் பேசிய இந்த மண், மனிதர்களை அழிக்கக்கூடிய எந்த ராணுவத்தளவாட உற்பத்தி யையும் ஏற்றுக்கொள்ளாது. நாங்கள் அமைதியை விரும்புகிறவர்கள். அமைதிக்கான அடையாளமாக இருக்கிறோம். அப்படியே இருந்துவிட்டு போகிறோம்.

**பூவுலகின் நண்பர்கள்.**


## விளம்பர கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுபக்கம்)**

**பின்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுபக்கம்)**

**பின்னட்டை ரூ.** 10,000/- **(முழுபக்கம்)**

**கருப்புவெள்ளை ரூ.** 5,000/- **(முழுபக்கம்)**

# உலகின் முதல் தன்னார்வத் தொண்டு நிறுவனம்

1905ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23ஆம் தேதி அமெரிக்காவில் சிகாகோ நகரத்தில் நான்கு நண்பர்கள் பால்ஹாரிஸ் என்ற வழக்கறிஞர் தலைமையில் ஒன்று கூடி தங்களது தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு சங்கம் ஆரம்பிக்க முடிவு செய்தனர். சங்கக்கூட்டத்தை ஒவ்வொரு வாரமும் நடத்த வேண்டும் என்றும் சுழற்சி முறையில் தொடர்ந்து கூட்டத்தை வெவ்வேறு இடங்களில் நடத்த தீர்மானித்ததால் அந்த அமைப்பிற்கு ரோட்டரி என்று பெயர் வைத்தனர்.

பால்ஹாரிஸ் ரோட்டரி அமைப்பைத் தொடங்கினாலும் முதல் ரோட்டரி சங்கத்திற்குத் தன்னுடைய நண்பரான கெஸ்டாவிஸ்லொயர் என்பவரை தலைவராக்கினார். 1910ஆம் ஆண்டில் பால்ஹாரிஸ் ரோட்டரியின் தலைவ ரானார். தங்களது தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக ஆரம்பத்தில் ரோட்டரி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டாலும் ரோட்டரி சங்கம் ஆரம்பித்து ஓரிரு ஆண்டுகளில் சமூகத்தில் சேவை செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்பட்டு தொடர்ந்து அமெரிக்காவில் சான்பிரான்ஸிஸ்கோ, ஓக்லாண்ட், லாஸ்எஞ்சல்ஸ், உள்ளிட்ட இடங்களில் தொடங்கப்பட்டு 1912இல் கனடாவில் விஸ்கான்சிஸ் நகரில் புதிய கிளை தொடங்கப்பட்டது.

1912இல அமெரிக்காவிற்கு வெளியிலும் இந்தச் சங்கம் தொடங்கப்பட்டதால் இந்த சங்கத்தின் பெயர் பன்னாட்டு ரோட்டரி சங்கம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தொடர்ந்து ரோட்டரி சங்கங்கள் லண்டனிலும், 1916இல் கியூபாவிலும், 1919இல் பிலிப்பைன் சிலும் 1920இல் இந்தியாவிலும் தொடங்கப்பட்டது. உலகின் முதல் தன்னார்வத் தொண்டு நிறுவனமான ரோட்டரி சங்கத்தில் 1925 இல் சங்க உறுப்பினர்கள் எண்ணிக்கை 20 ஆயிரம் ஆகவும், சங்கங் களின் எண்ணிக்கை 200 ஆகவும் இருந்தது. தற்போது உலகம் முழுவதும் 34, 282 சங்கங்களும், பன்னிரண்டு லட்சம் உறுப்பினர்களும் உள்ளனர். ரோட்டரி அமைப்பை பொறுத்தவரையில் அது பல்வேறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டமும் ஒரு ஆளுநரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

ரோட்டரி என்பது மனிதநேய சேவைகள் வழங்கும் அனைத்து தொழில்களிலும் உயர் நெறிமுறைத் தரங்களை ஊக்கப்படுத்தும் மற்றும் நல்லெண்ணத்தையும் அமைதியை யும் உலகில் வளர்க்க உதவும் தொழில் மற்றும் தொழில் வல்லுனர்களை ஒருங்கே கொண்ட ஒரு நிறுவனமாகும். உலகத்தில் இளம்பிள்ளை வாதத்தை ஒழித்த பெருமை ரோட்டரியையே சாரும்.

**வழக்கறிஞர் அன்பரசன்.**

# தமிழர்களுக்கு கிரிக்கெட் விளையாடத் தெரியாது?

இந்திய கிரிக்கெட் அணிக்கு இதுவரை தேர்வான தமிழக வீரர்கள்!

**1. ஸ்ரீகாந்த் - பார்ப்பனர்**

**2. டபிள்யூ . வி. இராமன் - பார்ப்பனர்**

**3. சிவராமகிருஷ்ணன் - பார்ப்பனர்**

**4. சடகோபன் இரமேஷ் - பார்ப்பனர்**

**5. லஷ்மிபதி பாலாஜி - பார்ப்பனர்**

**6. முரளிகார்த்திக் - பார்ப்பனர்**

**7. ஹேமங்பதானி - பார்ப்பனர்**

**8. பத்ரிநாத் - பார்ப்பனர்**

**9. இரவிச்சந்திரன் அஷ்வின் - பார்ப்பனர்**

**10. அபினவ் முகுந்த் - பார்ப்பனர்**

**11. முரளி விஜய் - பார்ப்பனர்**

**12. தினேஷ் கார்த்திக் - பார்ப்பனர்**

**13. வாஷிங்டன் சுந்தர் - பார்ப்பனர்**

**14. விஜய் சங்கர் - பார்ப்பனர்**

தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் 3 சதவிகிதம் மட்டுமே உள்ள ஒரு பிரிவினர் மட்டுமே தேர்வாகி உள்ளனர். மீதம் உள்ள 97 சதவிகிதம் பேர் கைதட்டவும் காசு செலவழிக்கவும் மட்டுமே! என்ன ஆச்சரியம்! கிரிக்கெட் வீரர்களை தேர்வு செய்பவர்கள் ஏனோ தமிழகத்தின் மீனவர்களை மறந்து விட்டனர். அவர்களைத் தேர்வு செய்து, மட்டையைக் கொடுத்துப் பாருங்கள் எல்லாப் பந்துகளும் மைதானத்துக்கு வெளியே தான் போய் விழும்.



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**



நாம் அன்னையர் முன்னணிஅமைப்பினர் எலியட்ஸ்கடற்கரையில்,
காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரிஆர்ப்பாட்டம் நடத்தினர். தந்தை ஜகத் கஸ்பார்,
மூத்தவழக்கறிஞர் திரு. காந்தி, வழக்கறிஞர் கனிமொழிமதி, மேனாள்நடுவண் அமைச்சர் அன்புமணி ராமதாஸ்,
திரு. ஜேம்ஸ்வசந்தன், திரு. இரமேஷ்பிரபா, திருமதி கிருபா உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.



MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

